# அச்சாரம்

ACCHARAM

பல்சுவை மாத இதழ்

Tamil Monthly

மலர் - 8 | இதழ் -12 | ஜூலை 2024 | விலை ரூ.15/-

Volume - 8 | Issue -12 | July 2024 | Price Rs.15/-





LYCA
PRODUCTIONS
SUBASKARAN
PRESENTS
ஜூலை 12
உலகமெங்கும் திரையரங்குகளில்
ULAGANAYAGAN
KAMAL HAASAN IN SHANKAR'S
இந்தியன் II
ZERO TOLERANCE
MUSIC ANIRUDH DIRECTOR OF PHOTOGRAPHY RAVI VARMAN ISC
EXECUTIVE PRODUCER SUNDAR RAJ
G.K.M. TAMIL KUMARAN - M. SHENBAGAMOORTHY
PRODUCED BY SUBASKARAN
IMAX

# ஆசிரியர் பக்கம்


# அச்சாரம்

மலர் - 08 இதழ் -12 ஜூலை 2024

வெளியீட்டாளர் – ஆசிரியர்
**M.C.சேகர் B.E.,**

இணை ஆசிரியர்கள்
**V.செந்தில்குமார்**
P.ரஞ்சித்குமார், பாலகுமார்சோமு, ,
ராஜா துரைசாமி R.துரை B.E.,
R.சிவா M.Tech., சே.உமா,
தமிழ் ஆப்தன் (தினேஷ்)

துணை ஆசிரியர்கள்
T.மதுராஜ், A. NANDAN
R.சரண்குமார் B.E., A.E.SELVAM
A.K.MUTHU, SP.SELVAKUMAR

கௌரவ ஆசிரியர்
N.வெங்கடேசன் PSK Travels
M.SIVAKUMAR

பொறுப்பாசிரியர்
M.திரவியப்பாண்டியன் M.A., L.L.B.,

சிறப்பாசிரியர்
R.K அன்பழகன்,
T.அன்பழகன்,

முதன்மை நிருபர் – ஆலோசகர்
பாப்பனப்பட்டு வ.முருகன்

நிருபர்கள்
A.சரவணன்

B.P.முன்னா

புகைப்படக் கலைஞர்
K.சுரேஷ் B.Tech.,

சட்ட ஆலோசகர்கள்
K.செந்தூரபாண்டி B.Sc.,B.L.,
C.காசிவிஸ்வநாதன் B.Sc., B.L.,
P.பாலசுப்பிரமணியம் B.A., B.L.,

வடிவமைப்பு:
4 மீடியா டிசைன்ஸ் @ 7871696917

SF1, 2nd Floor, 5/10, Anna Colony,
Virugambakkam, Chennai - 600 092.
**Cell: 9444153340**
E-mail: accharam2016@gmail.com




அனைத்து வாசகர்களுக்கும், விற்பனையாளர்களுக்கும், விளம்பரம் கொடுத்து உதவிக்கொண்டு வருபவர்களுக்கும் முதல் வணக்கம். ஜூலை 1ல் வெளிவரும் அச்சாரம் 8ஆம் ஆண்டின் 12 ஆம் இதழை உங்கள் ஆதரவோடு தங்கள் முன் சமர்ப்பிக்கிறேன். எனது வேண்டுகோளுக்கு இணங்க வாசகர்கள் சந்தாவை செக்காக அனுப்பியது மட்டுமில்லாமல் சந்தா தொகையினை வங்கியிலும் கட்டி ஆதரவு கொடுத்துக் கொண்டிருக்கிறீர்கள். அதற்கு முதற்கண் நன்றியை தெரிவித்துக் கொள்கிறேன்.


தொடர்ந்து உங்கள் ஆதரவை நல்கும்...

**M.C.சேகர்** B.E., ஆசிரியர்
செல்: **9444153340**

# இராசுக்குட்டி பதில்கள்

**ஆட்சிக்கு வருவதற்காக தருகின்ற வாக்குறுதிகளை, அரசியல்வாதிகள் முழுமையாக நிறைவேற்றுவதில்லையே... ஏன்?**

எஸ்.விலாசினி, ஊட்டி



ஒரு மன்னனுக்கு, ஏராளமான குழந்தைகள். அந்த நாட்டின் சட்டப்படி, மன்னனின் வாரிசுகளில், யாருக்கு மக்களிடம் அதிக செல்வாக்கு இருக்கிறதோ, அவர்களே மன்னனாக முடியும்.

அந்த வகையில், மன்னனின் பிள்ளைகளில் ஒருவன், மக்களிடம், அவன் அந்த நாட்டு அரசனானால், அவர்களுக்கு நிறைய சலுகைகள் வழங்குவதாக உறுதியளித்தான்.

அவனுடைய பேச்சு, மக்களை ஈர்த்தது. மக்கள் அதில் மதி மயங்கினர். அதனால், அவனை அமோகமாக ஆதரித்தனர். அவனும் அந்நாட்டின் மன்னனானான். ஆனால், அவன் மன்னனான பின், அவன் கொடுத்திருந்த வாக்குறுதிகளில், ஒன்றைக் கூட நிறைவேற்றவில்லை.

இதனால், மக்கள் வெறுப்படைந்து இருந்தனர். மக்களின் சார்பாக, மன்னரிடம் மெய்க் காப்பாளனாக வேலை பார்த்த ஒருவன், அவரிடம் கேட்டான்.

"மன்னா! உங்கள் வார்த்தைகளை நம்பித்தான், மக்கள் உங்களுக்கு ஆதரவளித்தார்கள். ஆனால், நீங்கள் அவர்களின் ஆதரவை மட்டும் பெற்றுக் கொண்டு, அவர்களுக்குச் செய்வதாகச் சொன்ன சலுகைகள் ஒன்றைக்கூட செய்யவில்லையே... ஏன்?"

மன்னன் பதிலேதும் பேசவில்லை. சில நாட்கள் கழித்து, அந்த மெய்க்காப்பாளனை அழைத்துக் கொண்டு, நதிக்கு மீன் பிடிக்கச் சென்றான்.

மெய்க்காப்பாளன் தூண்டிலில் புழுவை மாட்டிக் கொடுக்கக் கொடுக்க, அதை வாங்கிய மன்னன், நதியில் மீன் பிடித்தான். நிறைய மீன்கள் சிக்கின.

மன்னன் மீண்டும் அரண்மனைக்குக் கிளம்பும் முன், மெய்க்காப்பாளனிடம் கேட்டான், "வீரனே! நான் மீன் பிடிப்பதற்கு முன்பாக, மீனுக்கு விருப்ப உணவாக இருக்கும் புழுக்களை, தூண்டிலில் மாட்டி என்னிடம் கொடுத்தாயே... இப்பொழுது இரண்டு கூடை நிறைய மீன்கள், பசியால் துடிதுடித்துக் கொண்டிருக்கின்றன... அவற்றிற்கு, நீ ஏன் புழுவை இப்பொழுது உணவாக வழங்கவில்லை?" என்று. வீரன் சட்டென பதில் சொன்னான், "மன்னா! நமது நோக்கம் புழுவைக் காட்டி, மீன்களைப் பிடிப்பது தானே தவிர, மீன்களைப் பிடித்து, அதற்கு புழுக்களை உணவாக அளிப்பது அல்ல..." என்று.

மன்னன் சிரித்துக் கொண்டே சொன்னான், "இப்பொழுது புரிகிறதா? நான் ஏன், மன்னனாகும் முன் மக்களுக்குத் தந்த வாக்குறுதிகளை, மன்னான பின் செய்யவில்லை என்று... பாவம் மக்கள்..." என்றான், அந்த வாய்ஜால மன்னன்.

**"பதிலடி" என்றால் என்ன?**

கு.சுதா, திருவண்ணாமலை

பிரபல நகைச்சுவை எழுத்தாளர் மார்க் ட்வைன், ஒருவரிடம் புத்தகம் ஒன்றை இரவல் கேட்டார்.

அதற்கு அந்த நண்பர், “என் அறையில் படிப்பதாக இருந்தால் தருகிறேன்...“ என்றார்.

மார்க் ட்வைன், ஏதும் பேசாமல் திரும்பி விட்டார்.

சில நாட்கள் கழித்து, அதே நண்பர், மார்க் ட்வைனிடம், “உங்கள் தோட்டத்துக் கடப்பாரையை, ஒரு நாள் இரவல் கொடுங்கள்...“ என்று கேட்டார்.

அதற்கு மார்க் ட்வைன், அமைதியாகச் சொன்னார், “என் தோட்டத்தில் தோண்டுவதாக இருந்தால் கொடுக்கிறேன்...“ என்று. இது தான், “பதிலடி“.

## சிந்தனையைத் தூண்டும்படி, ஏதாவது கூறுங்களேன்...

கு.ராஜ்குமார், சென்னை

ஒரு ஊரில் ஒருவன் இருந்தான். அவனுக்கு கடவுள் பக்தி ரொம்ப அதிகம். அடிக்கடி கோவிலுக்குச் செல்வான், கடவுளை வேண்டிக் கொள்வான். அதன் பிறகு காட்டுக்குச் செல்வான், விறகு வெட்டுவான். அதைக் கொண்டு போய் விற்பனை செய்வான்.

இதில் ஓரளவுக்கு வருமானம் வந்தது. அதை வைத்துக் கொண்டு நிம்மதியா வாழ்க்கை நடத்திக் கொண்டு இருந்தான் .

ஒரு நாள், வழக்கம் போல அவன் காட்டுக்குச் செல்லும் போது, அங்கே ஒரு நரியைப் பார்த்தான்.

அந்த நரிக்கு, முன்னங்கால் இரண்டுமே இல்லை. ஏதோ விபத்தில் இழந்தது போல இருந்தது. அது, தனிமையாக ஒரு மரத்தடியில் அமர்ந்திருந்தது.

அதை இவன் பார்த்தான். அப்போது இவன் மனதில் ஒரு சந்தேகம். “இந்த நரிக்கு இரண்டு காலும் இல்லை... அப்படி இருக்கும் போது, இது எப்படி வேட்டையாடி தன்னுடைய பசியைப் போக்கி கொள்ள முடியும்...“ என்று, யோசிக்க ஆரம்பித்தான்.

அவ்வாறு யோசித்துக் கொண்டு இருக்கும் போதே, அந்தப் பக்கமாக ஒரு புலி வந்தது.

அதைப் பார்த்த உடனே, ஓடிப் போய் ஒரு மரத்துக்குப் பின், ஒளிந்து கொண்டான். ஒளிந்து கொண்டு, என்ன நடக்கிறது என, கவனிக்க ஆரம்பித்தான்.

அந்தப் புலி, ஒரு பெரிய மானை அடித்து இழுத்துக் கொண்டு வந்து, அதைச் சாப்பிட்டது. தான் சாப்பிட்டது போக, மீதியை அப்படியே அங்கேயே போட்டு விட்டுப் போய் விட்டது.

புலி சென்ற பிறகு, கால் இல்லாத அந்த நரி, மெதுவாக நகர்ந்து வந்தது. மிச்சமிருந்த மான் இறைச்சியை சாப்பிட்டு பசியாறியது.

இவ்வளவையும் மரத்துக்குப் பின்புறம் மறைந்து நின்று கவனித்தவன், யோசிக்க ஆரம்பித்தான்.

“இரண்டு காலும் இல்லாத ஒரு வயதான நரிக்கே, ஆண்டவன் சாப்பாடு போடறான்... அப்படி இருக்கறப்போ, தினமும் கோவிலுக்குப் போய் சாமி கும்பிடற நமக்கு, சாப்பாடு போடாம விட்ருவானா? நமக்குக் கடவுள் பக்தி வேற அதிகம்... நாம எதுக்கு அனாவசியமா வெயில்லயும் மழையிலயும் க்'டப்படணும்? எதுக்காக வேர்வை சிந்தி விறகு வெட்டணும்?“ என்று யோசித்தான்

அதன் பிறகு, அவன் காட்டுக்கே போவதில்லை. கோடரியைத் தூக்கி எறிந்தான். வீட்டின் ஒரு மூலையில் போய் உட்கார்ந்து கொண்டான். அவ்வப்போது, கோவிலுக்கு மட்டும் சென்று வருவான்.

“கடவுள் நம்மைக் காப்பாற்றுவார்... அவர் நமக்கு வேண்டிய சாப்பாட்டைக் கொடுப்பார்...“ என நம்பினான்.

கண்ணை மூடிக்கொண்டு, கோயில் மண்டபத்திலேயே, ஒரு தூணில் சாய்ந்து உட்கார்ந்து கொண்டான்.

நாட்கள் போய்க் கொண்டே இருந்தது. சாப்பாடு வந்தபாடில்லே. அவன் பசியால் வாடிப் போனான். உடம்பு இளைத்துப் போய், எலும்பும் தோலுமாக ஆகிப்போனான்.

ஒரு நாள், ராத்திரி நேரம். கோயிலில் யாருமே இல்லை. அவன் மெதுவாக கண்ணைத் திறந்து கடவுளைப் பார்த்தான்.

“ஆண்டவா... என்னுடைய பக்தியிலே உனக்கு நம்பிக்கை இல்லையா? நான் இப்படியே பட்டினிக் கிடந்து சாக வேண்டியது தானா? காட்டில் அந்த நரிக்கு, புலி மூலமாக சாப்பாடு போட்டாயே... அதைப் பார்த்துவிட்டுத் தானே இங்கே வந்தேன்? என்னை இப்படி தவிக்க விட்டுவிட்டியே... இது நியாயமா?“ என்றான்.

அப்போது கடவுள், மெதுவாகக் கண்ணைத் திறந்து சொன்னார், “முட்டாளே! நீ பாடம் கற்றுக் கொள்ள வேண்டியது, நரியிடமிருந்து இல்லை... புலியிடமிருந்து...“ என்று.

அற்ப சந்தோ‘த்திற்கு இடம் தரக் கூடாது என்கிறார்களே... ஏன்?

ஆ.மகிழினி, சிதம்பரம்

புறாக்களை விற்பனை செய்கின்ற ஒரு கடையில், இரண்டு கூண்டுகள் இருந்தன.

ஒரு கூண்டிற்கு மேல் இன்னோர் கூண்டு இருந்தது. மேலே உள்ள கூண்டில், சாம்பல் வண்ண புறாக்களும், கீழே உள்ள கூண்டில், பழுப்பு வண்ண புறாக்களும் இருந்தன.

மேலிருக்கும் சாம்பல் புறாக்களின் எச்சங்கள் எப்போதும், கீழ் உள்ள பழுப்பு புறாக்களின் கூண்டில் வந்து விழும். ஏற்கனவே கூண்டில் இருக்கிற கடுப்போடு, மேலிருந்து விழுகிற சாம்பல் புறாக்களின் எச்சங்களில், பழுப்புப் புறாக்கள் மிகவும் ஆத்திரம் அடைந்திருந்தன.

பழுப்பு புறாக்களும், சாம்பல் புறாக்களும், தொடர்ந்து இது குறித்து தங்களுக்குள் சண்டை செய்துகொண்டே இருந்தன.

ஒரு நாள் கடைக்காரன், பழுப்பு புறாக்களின் கூண்டுகளை, மூடாமல் சென்றுவிட்டான். பழுப்பு புறாக்கள் கூண்டை விட்டு வெளியே வந்தன.

அவற்றில் ஒரு புறா, “நாம் தப்பித்துப் போவது அப்புறம் இருக்கட்டும்... இதுவரை நம்மீது எச்சமிட்டுக் கொண்டிருந்த சாம்பல் புறாக்களை, நாம் பழி வாங்கவேண்டும்...“ என்று, தன் அற்ப ஆசையைச் சொல்லி, சாம்பல் புறாக்களின் கூண்டிற்கு மேலே அமர்ந்து எச்சமிடத் தூண்டியது.

பல நாட்களுக்கான கோபம், பழிவாங்குகிற ஆர்வத்தில், தொடர்ந்து எச்சமிட்டுக் கொண்டே இருந்ததில், கடைக்காரன் திரும்பி வந்ததை, பழுப்புப் புறாக்கள் கவனிக்க மறந்து விட்டன.

வந்ததும், முதலில் அதிர்ச்சி அடைந்த கடைக்காரன், பின்னர், எல்லா பழுப்பு புறாக்களையும் பிடித்து, பழையபடி, சாம்பல் புறாக்கள் இருக்கிற கூண்டிற்குக் கீழே உள்ள கூண்டில் அடைத்து விட்டான்.

பழுப்புப் புறாக்களுக்கு, தாங்கள் கூண்டில் அடைப்பட்டதை விட, சாம்பல் புறாக்கள் மீது எச்சமிட்டு பழி வாங்கிவிட்டோம் என்பதிலே திருப்தி அடைந்தன.

இப்போது புரிகிறதா... ஏன் அற்ப சந்தோ‘ம் வேண்டாமென.

**உருவத்தைப் பார்த்து, அறிவை எடை போடக் கூடாது என்பதற்கு, ஓர் உதாரணம் கூற முடியுமா?**

ஆர்.பாலா, தஞ்சாவூர்

அறிவியல் மையத்தில் வேலை பார்க்கும் விஞ்ஞானி ஒருவர், தன் காரில் பயணம் செய்து கொண்டிருந்தார். வழியில், டயர் பஞ்சர் ஆகிவிட்டது.

கண்களுக்கு எட்டியவரை, மெக்கானிக் கடை ஏதும் இல்லை. குறைந்தது மூன்று கிலோ மீட்டர் தூரம் சென்றால் தான், மெக்கானிக்கை அழைத்து வர முடியும் என்ற சூழல்.

அவருடன் யாரும் வராததால், அவரே டயரை மாற்ற ஆரம்பித்தார்.

அனைத்து போல்டுகளையும் கழட்டி விட்டு, ஸ்டெப்னி எடுக்கக் போகும் போது, கால் இடறி கீழே விழுந்ததால், கையில் வைத்திருந்த போல்டுகள், அருகிலிருந்த ஒரு குட்டையில் விழுந்து விட்டன.

என்ன செய்வது என்று, யோசித்துக் கொண்டு இருந்தார். அப்போது, கிழிந்த ஆடையோடு, ஒரு வழிப்போக்கன் அந்த வழியாக வந்தான்.

அந்த வழிப்போக்கன், இவரைப் பார்த்து, ”ஐயா, என்னங்க ஆச்சு?” என்றான்.

இவரோ, “இவனிடம் சொல்லி என்ன ஆகப் போகிறது?' என்று எண்ணியபடி, ”ஒண்ணுமில்ல...” என்றார்.

அந்த வழிப்போக்கன் கிளம்ப எத்தனித்தான். அந்த விஞ்ஞானிக்கு, அப்பொழுது ஒரு எண்ணம் தோன்றியது.

இந்த சாக்கடைக் குட்டையில், இவனை விட்டால் யாரும் இறங்க மாட்டார்கள்... அதனால், இவனை இறங்கச் சொல்லலாம்...“ என்று எண்ணி, அவனிடம், ”நான் எவ்வளவு பணம் வேண்டுமானாலும் தருகிறேன்... இந்தக் குட்டையில் விழுந்த போல்டுகளை எடுத்துத் தருகிறாயா?” என்றார், விஞ்ஞானி.

”இதற்காகவா இப்படி நிற்கிறீர்கள்? இது தான் உங்கள் பிரச்னையா? நான் அந்தக் குட்டையில் இறங்கி, போல்டுகளை எடுத்துத் தருவதில், எனக்கு எந்த ஆட்சேபனையும் இல்லை... ஆனால், அதைவிட, காரின் மற்ற மூன்று சக்கரத்திலிருந்தும், தலா ஒரு போல்டைக் கழட்டி, இப்போதைக்கு இந்தச் சக்கரத்தை மாட்டி, வண்டியை தயார் பண்ணிக்கோங்க... பிறகு, பக்கத்தில் இருக்கும் மெக்கானிக் கடைக்கு ஓட்டிப் போய், நான்கு போல்டுகளை வாங்கி, எல்லா சக்கரத்திலும் மாட்டிக் கொள்ளுங்கள்...” என்றார், வழிப்போக்கர்.

நான் இத்தனை பெரிய விஞ்ஞானியாக இருந்தும், எனக்கு இந்த சுலப வழி தெரியாமல் போய் விட்டதே... இவரைப் போய், குறைத;து எடை போட்டு விட்டோமே...“ என்று, தனக்குள் கூறிக் கொண்டு, தலை குனிந்தார் விஞ்ஞானி.




## லைகா புரொடக்‌ஷன்ஸ் ரெட் ஜெயண்ட் மூவிஸ் தயாரிப்பில் உருவாகி இருக்கும் இந்தியன் 2 பத்திரிக்கையாளர் சந்திப்பு !!

உலக நாயகன் கமல்ஹாசனின் நடிப்பில், பிரம்மாண்ட இயக்குநர் ‘ஷங்கர் இயக்கத்தில், இந்தியாவெங்கும் எதிர்பார்ப்பை ஏற்படுத்தியிருக்கும் திரைப்படம் இந்தியன் 2 லைகா புரொடக்‘ன்ஸ் சுபாஸ்கரன் ரெட் ஜெயண்ட் மூவிஸ் தயாரிப்பில், பிரம்மாண்டமாக உருவாகியுள்ள இப்படம், வரும் ஜூலை மாதம் 12 ஆம் தேதி வெளியாகவுள்ள நிலையில், இப்படத்தின் புரமோசன் பணிகளைப் படக் குழுவினர் கோலாகலமாகச் செய்து வருகின்றனர்.



உலகநாயகன் கமல்ஹாசன், இயக்குநர் ஷங்கர், சித்தார்த், ஆகியோர் சென்னையில் பத்திரிக்கை ஊடக நண்பர்களைச் சந்தித்து உரையாடினர்.

இந்நிகழ்வினில்

நடிகர் சித்தார்த் பேசியதாவது…

இது மிகப்பெரிய மேடை, கமல்ஹாசன் சார், ஷங்கர் சார் இருவரும் அவர்களின் உழைப்பால் இந்த மேடையை உருவாக்கியிருக்கிறார்கள். இந்த மேடையில் நானும் இருப்பது பெருமை, 25 வருடம் கழித்து இரண்டாவது வாய்ப்பாக, என் குருவுடன் நடிக்கும், இந்த வாய்ப்பை ஷங்கர் சார் தந்துள்ளார். அவருக்கு நன்றி. கமல் சார், அவரை சின்ன வயதிலிருந்து கனவில் பார்த்திருக்கிறேன். இப்போது நேரில் தினமும் பார்க்கிறேன் அதுவே பெரும் பாக்கியம். அவருடன் நடித்தது எனக்குக் கிடைத்த மிகப்பெரிய பெருமை. ‘ஷங்கர் சார் தந்த இரண்டு வாய்ப்பிற்கும் நன்றி. இந்த திரைப்படம் ஊழலின் முகத்தை உண்மையாகப் பேசும் ஒரு முழுமையான படமாக இருக்கும். அனைவருக்கும் பிடிக்கும் படமாக இருக்கும்.“

இயக்குநர் ஷங்கர் பேசியதாவது...

“இந்தியன் உருவான போது, சேனாதிபதி கதாப்பாத்திரத்தை உருவாக்கக் கமல் சாரோட போட்டோ, அவரோடு அப்பா போட்டோ, அண்ணா போட்டோ என எல்லாவற்றையும் தோட்டா தரணியிடம் தந்து ஒரு ஸ்கெட்ச் போட்டுத் தரச் சொன்னேன். அந்த ஸ்கெட்ச் பார்த்த போதே சிலிர்ப்பாக இருந்தது. முதல் படத்தில் அவர் மேக்கப் போட்டு வந்து நின்ற போது கூஸ்பம்ஸ் வந்தது, இப்போது இந்த படத்தில் மீண்டும் அவர் மேக்கப் போட்டு வந்த போது, அதே சிலிர்ப்பு வந்தது. அதை வார்த்தைகளால் சொல்ல முடியாது. அவரை ஷ“ட்டில் பார்க்கும்போது கமல் சார் என்றே தோன்றாது, ஏதோ இந்தியன் தாத்தா நம்முடனே இருக்கிறார் என்பது போல் தான் தோன்றும். அவர் இந்தியன் தாத்தாவாகத்தான் வாழ்ந்திருக்கிறார். அதே உணர்வு படம் பார்க்கும் போது உங்களுக்கும் வரும். இந்தியன் படம் எடுக்கும் போது 2 ஆம் பாகம் எடுப்பேன் என நினைக்கவே இல்லை, அப்போது தேவைப்பட்ட போது, இந்தியன் தாத்தாவிற்கு அப்போதைக்கு ஒரு பிறந்த வயது வைத்து விட்டேன், ஆனால் இப்போது படம் எடுக்கும்போது அவருக்கு வயது என்ன என்கிற சர்ச்சை வந்துள்ளது. இதை நான் எப்படி பார்க்கிறேன் என்றால் சீனாவில் 118 வயது மாரியல் ஆர்ட்ஸ் வீரர் இருந்தார், அந்த வயதிலும் அவர் திடகாத்திரமாக சண்டை போடுவார், ஜேம்ஸ் பாண்ட் ஒரிஜினல் வயது 100க்குமேல் ஆனால் அதையெல்லாம் நாம் கண்டு கொள்வதில்லையே, அதே போல் இந்தியன் தாத்தா என்பது ஒரு உணர்வு. அதை ரசிகர்கள் ரசிப்பார்கள் என நம்புகிறேன். இந்தியன் பார்ட் 1 வந்த போது, பிராஸ்தடிக் மேக்கப் அந்த அளவு வளரவில்லை, அதனால் அது ரொம்ப திக்காக இருக்கும். ஆனால் இந்தப்

படத்தில் அந்த நிறுவனத்திடம் சொல்லி மேக்கப் தின்னாக இருக்க வேண்டும் எனக்கேட்டு போட வைத்தோம். அதனால் நீங்கள் கமல் சார் நடிப்பை இன்னும் நன்றாகப் பார்க்கலாம். இந்தப்படத்தை முதலில் வேறொருவர் தான் எடுப்பதாக இருந்தது ஆனால் கதையை கேட்டவுடன் நான் தான் தயாரிப்பேன் எனச் சொன்னார் சுபாஸ்கரன், இந்தியன் மாதிரி ஒரு படத்தை லைகா போன்ற நிறுவனம் தான் எடுக்க முடியும். சுபாஸ்கரன் சார், ரெட் ஜெயண்ட் நிறுவனம் சார்ந்த அனைவருக்கும் இந்த நேரத்தில் நன்றி. இந்தியன் படம் தமிழ் நாட்டில் நடக்கும் ஆனால் இது இந்தியா முழுக்க நடக்கும் கதை, இந்தியா முழுக்க பல மாநிலங்களில் ‘ஷூட் செய்துள்ளோம். ரசிகர்கள் ரசிப்பார்கள் என்று நம்புகிறேன்.“

நடிகர் கமல்ஹாசன் பேசியதாவது...

“இந்த வயதில் இப்படம் செய்யும் ஆர்வம் இவர்களிடம் இருந்து தான் வந்தது. எல்லா கலைஞர்களும் தந்த ஊக்கம் தான் என்னை இயக்கியது. நேர்மறை விசயங்கள் தாண்டி, இந்த படத்தின் ஷ்ூட்டிங்கின் போது, நிறையத் தடங்கல்களும் வந்தது. இவ்வளவு கஷ்‘டப்படுகிறோம் ஆனால் இந்த உழைப்பு ரசிகர்களிடம் போய்ச்சேருமா? எனத் தயக்கம் இருந்தது, ஆனால் இப்போது அது சேரப்போகிறது என்பது மகிழ்ச்சி. உடன் பணிபுரிந்தவர்கள் பலர் இப்போது இல்லை, இப்படிப் பல நிகழ்வுகளைத் தாண்டித்தான் இந்தப்படம் இங்கு வந்துள்ளது. இப்போது எல்லோரும் நன்றாக இருப்பதாகச் சொல்வது மகிழ்ச்சி. சென்சாரில் படம் பிடித்ததாகச் சொல்லியிருக்கிறார்கள். அது இன்னும் மகிழ்ச்சி. இந்தியன் படம் எடுக்கும் போது, அது தான் அதிக பட்ஜெட் அது ஒரு குறையாகக் கூடச் சொல்லப்பட்டது, ஆனால் இப்போது இந்தப்படத்துடன் ஒப்பட்டால் அது ஒன்றுமே இல்லை. இப்படத்தை அத்தனை பிரம்மாண்டமாக உருவாக்கியிருக்கிறார் ‘ஷங்கர். அத்தனை கலைஞர்களும், நட்சத்திரங்களும் முழு உற்சாகத்துடனும், உண்மையாக உழைத்து உருவாக்கியுள்ளனர். விவேக் சொன்னது இன்னும் மனதில் ஒலித்துக்கொண்டே இருக்கிறது. இந்த உழைப்பு அத்தனையும் நம்புகிறேன் நான். இந்தியன் தாத்தா உபயோகிக்கும் பேனா, உடை என அத்தனையையும், அவ்வளவு நுணுக்கமாக ஆராய்ந்த பிறகே ஒகே சொல்வார் இயக்குநர். கனவில் நினைத்துக் கொண்டிருந்ததை எல்லாம் நிஜமாக்கி காட்டியிருக்கிறார். இந்தியன் என்றால் என்ன தாத்தா வருவார், ‘ஷங்கர் படமென்றால் பிரம்மாண்டம் பாட்டு நல்லாருக்கும் என எளிதாகச் சொல்லி விடுவார்கள், ஆனால் அது அத்தனை எளிதல்ல, இரண்டாம் பாகம் எனும் போது, நானே அதைத்தான் சொன்னேன், இதே கேள்வி எனக்கும் இருந்தது. ஆனால் அதைத்தாண்டி மிகச்சிறப்பாகத் திரைக்கதை அமைத்துள்ளார் ‘ங்கர். ரசிகர்களை சர்ப்ரைஸ் செய்ய நிறைய வைத்துள்ளார். படம் உங்கள் அனைவரையும் அசத்தும்“.

பிரம்மாண்டம் எனும் சொல்லுக்கு புதிய அளவுகோலை நிர்ணயிக்கும் வகையில், லைகா புரொடக்ஷன்ஸ் நிறுவனம் சார்பில் சுபாஸ்-கரன் & ரெட் ஜெயண்ட் மூவிஸ் இப்படத்தை, மிகப்பெரும் பொருட்செலவில் தயாரித்துள்ளனர். இந்தியன் 2, அசல் தமிழ் பதிப்பு இந்தியன் 2 எனவும் மற்றும் தெலுங்கில் பாரதியுடு 2, இந்தியில் ஹிந்துஸ்தானி 2 என உலகம் முழுவதும் ஜூலை மாதம் 12 ஆம் தேதி உலகமெங்கும் இப்படம் வெளியிடப்படுகிறது.

நடிகர்கள்: கமல்ஹாசன், சித்தார்த், காஜல் அகர்வால், ரகுல் ப்ரீத் சிங், எஸ்.ஜே.சூர்யா, பாபி சிம்ஹா, விவேக், பிரியா பவானி ‘ஷங்கர், பிரம்மானந்தம், சமுத்திரக்கனி, நெடுமுடி வேணு, டெல்லி கணேஷ்‘, மனோபாலா, ஜெகன், காளி-தாஸ் ஜெயராம், குல்ஷன் குரோவர், ஜாகீர் உசேன், பியூஸ் மிஸ்ரா, அகிலேந்திர மிஸ்ரா.

இயக்குநர்: ‘ஷங்கர்
இசை: அனிருத் ரவிச்சந்தர்
ஒளிப்பதிவு இயக்குனர்: ரவிவர்மன்
வசனம் : ஜெயமோகன், கபிலன் வைரமுத்து,
தயாரிப்பு: சுபாஸ்கரன்
மக்கள் தொடர்பு : சதீஷ்‘ (AIM)
நிர்வாக தயாரிப்பாளர் : சுந்தர் ராஜ்

G.K.M. தமிழ் குமரன் – M. செண்பகமூர்த்தி




# செம்மறிகள்

இயக்குனர் ஜேப்பி

என்ன பேசுனாலும், உடனே சொல்லிபுடுவேன். அவரு என்னைய வெறும் வேலைக்காரனாதேன் வச்சுருந்தாரு, அவருக்கே அம்புட்டு விசுவாசமா இருந்தேன். நீங்க! என்னைய நண்பன் மாதிரி நடத்துறிய உங்களுக்கு ஒரு துரோகம் நடக்குதுங்கும் போது நா எப்படிய்யா பேசாம இருக்க முடியும்?

நீ என்ன முனியா சொல்றே? ஆமாங்கய்யா சின்னாத்தா சரியில்ல. கலியாணத்துக்கு முன்னாலயே சங்கரய்யாவுக்கும், சின்னாத்தாவுக்கும் தொடர்பு இருந்துச்சு எனக்கு தெரியும். இப்பவும் அது தொடரும்னு நா எதிர்பார்க்கல அய்யா!

ஏதேதோ மேலும் சொல்லிக்கொண்டிருந்தான் முனியன். பாலகிரு‘ணன் காதில் அதெல்லாம் விழவில்லை. நண்பன் சொன்ன வார்த்தை எதிரொலி போல காதில் ஒலித்தது. கொணம் கெட்ட கழுதையா இருந்தா, குடும்பம் நடத்து, கொண்டோடியா இருந்தா தலை முழுகிட்டு வந்துரு. தலை முழுக முடிவு செய்தான் பாலகிரு‘ணன்.

சரி முனியா நீ ஊருக்கு போ, நா எங்கூருக்கு போறேன். அய்யா நாஞ் சொன்னேன்னு..! இந்த உசுரு உருக்குற வரை அது ரகசியம். அய்யா உங்க நல்ல மனசுக்கு ஒரு கொரையும் வராதுங்க. நீங்க நல்லா இருப்பிய இந்த முனியனை மறந்துறாதிக அய்யா.

திரும்பி வந்த டவுன் பஸ்ஸில் பாலகிரு‘ணன் கண்ணீரோடு வழியனுப்பி வைத்தான் முனியன். பஸ் மறையும் மட்டும் பார்த்து நின்றான். அழுகை முட்டிக்கொண்டு வந்தது. கணத்த இதயத்தோடு தனது கிராமம் வந்து சேர்ந்தான் பாலகிரு‘ணன். பெருமாளை கண்டதும் முகத்தை துண்டால் பொத்திக் கொண்டு குமுறி அழுது விட்டான். பாலகிரு‘ணனை தேற்றுவது பெரிய வேலையாக போய் விட்டது. அருகிலிருந்த மாட்டு கொட்டகைக்குள் இருவரும் அமர்ந்தனர்.

ஏலே விடுடா உனக்கென்னடா ஆம்பளை சிங்கம். ஆயிரம் கலியாணம் பண்ணலாம். கோயிலுக்கு போன அவ அப்பன் வரட்டும். அவ யோக்கிதய அம்பலப்படுத்தி வெட்டி விட்டுபுட்டு எங்கொழுந்தியாவ கட்டி வச்சுப்புறேன்.

இல்ல பெருமா எனக்கு இன்னமே கலியாணம் வேணாம். அவ எனக்கு துரோகம் செஞ்சாலும், நா அவளுக்கு துரோகம் செய்ய மாட்டேன். என்னிக்கி மொத மொதலா பாத்தனோ அன்னிக்கே அவள எம்மனசுலெ பச்சை குத்திட்டேன். அவ கூட வாழாட்டாலும் அவ நெனப்புலயே வாழ்ந்துருவேன்.

போடா பொசப்பத்த பயல பேசுறாம் பாரு பேச்சு பேப்பயலாட்டம் வளக்க தெரியாம வளத்து வாக்கிலெட்டு போன முண்டைய வசதிய காட்டி கட்டி வச்சு ஏமாத்தி புட்டாங்கெ பெருசா பேசுறாரு. அவளுக்கு பணத்திமிரு மட்டுமில்ல அழகா இருக்கோமுங்கிற கர்வம். அதனாலதேன் இப்டி அசிங்கமா நடந்துக்குறா. நீ என்னதேன் அவ மேல அன்பு வெச்சு உருகுனாலும் அத பத்தி அவளுக்கு ஒன்னுமே தெரியாது. செகுடன் காதுலெ சங்கு ஊது கததேன். அவ அழகுல மசங்கி போயிதேன் நீ சுத்துறேன்னு நெனப்பா.

அவ என்னை என்ன வேணுமுன்னாலும் நெனச்சுட்டுப் போகட்டும். அத பத்தி எனக்கு கவலை இல்லை. நா வேற கல்யாணம் பண்ணிக்கிட்டேன்னா ஊரு அவளத்தான் கேவலமா பேசும். ஏன்னா அவ பொம்பள என்னை மாதிரி அவளால இன்னொரு கல்யாணத்தெ அம்புட்டு ஈசியா பண்ணிக்கிற முடியாது. என்னால அவ கண்ணீர் சிந்தக் கூடாது அப்டி சிந்தினா நா அவ மேல வச்ச பாசம் நீ சொன்னது மாதிரி அவளோட அழகுக்குதேன்னு ஆகிடும். அப்பா அரிச்சந்துரா போ போயி அவளுக்கு வெளக்கு புடி, எனக்கென்ன எங்கிட்ட வந்து பொலம்புர வேலை மட்டும் வச்சுக்குறாதே. அவள முழுசா மறந்துட்டு என்னிக்கி வாரியோ அப்ப வா எங்கிட்ட அது வரைக்கும் எம்முகத்துலயே முழிக்காதே. தும்பத்துக்கு மட்டும் தோள் குடு, அது தான் தோழமையோட உயிர் நாடின்னு படிச்ச நாவுகம். உன்னால தாங்க முடியாத தும்பம் வரும் போது இங்க வா. வேகமாக வெளியேறிப் போனான் பெருமாள்.

கோயிலுக்கு போய் விட்டு வந்து முதுகுளத்தூர் பேருந்து நிலையத்தில் இறங்கினார் சிவனாண்டி கோன் நேராக கடைக்குப் போனார். அப்பொழுது தான் சங்கரநாதன் வந்து கடையை திறந்து சாமான்களை வெளியே எடுத்து வைத்து பத்தி கொழுத்தி சாமி கும்பிட்டுக் கொண்டிருந்தான். கோனார் வந்ததும்.

வாங்க மாமா, இப்பத்தான் வாரீங்களா? ஆமாப்பு, எங்கே மாமா, முருகையா தாத்தாவ காணோம் அவரா? இனிமே நா ஊருக்கு வந்து என்ன பண்ண போறேன்னு சொல்லிபுட்டு ஒடம்புலெ தெம்பு இருக்குற வரைக்கும், ஒவ்வொரு கோயிலா சுத்தப் போறேன்னு சொல்லிட்டு புறப்பட்டாரு. நல்ல காரியந்தானேன்னு நெனச்சு நாந்தேன் வழியனுப்பி வச்சேன். அடங்காத புள்ளைய பெத்தவங்கெல்லாம். இந்த கதிதேன் அடையனும். என்னைய மாதிரி ஒரு பொட்டப்புள்ளய பெத்துருந்தாலும் பொம்போல இருந்துருக்கலாம். ஆம்பளை புள்ளய பெத்துபுட்டு இன்னிக்கி ஆண்டி பரதேசி மாதிரி ஆகிட்டாரு. வீட்ல மாப்பிள்ளை, தாமரை எல்லாரும் சவுக்கியந்தானே? தலை குனிந்தான் சங்கரநாதன்.

என்னப்பு பேசாம இருக்கிய? என்னமும் பெரச்சனையா? பதட்டத்துடன் கேட்டார் கோனார். என்னான்னு தெரியலெ மாமா, தாமரை மாப்பிள ஊருக்குப் போயி ஒரு வாரம் ஆகப் போகுது ஒரு தகவலும் இல்ல, எங்கிட்ட கூட சொல்லிட்டு போகலை. தாமரைகிட்ட கேட்டேன். ஊருக்கு போயிட்டு வருவோம்முன்னு கூப்பிட்டாராம். இது உடம்புக்கு சரியில்லெ, நீங்க போயிட்டு வாங்க, இனிமே போகும் போது சேந்து போகலாம்னு சொல்லிருக்கும் போலிருக்கு, அந்த வருத்தத்திலே தான் வராம இருந்துட்டாருன்னு நெனக்கிறேன்.

அடடே நல்ல பையன்னுல்ல நெனச்சேன் வெளியே தெருஞ்சா எம்மானம் மருவாதி என்னாகுறது ஊருக்கெல்லாம் நா பஞ்சாயம் பண்றேன் என் வீட்லெயே அதுவும் கல்யாணம் முடிஞ்ச, ஒரு மாதத்துலயேன்னா கேவலமா போயிருமே, இந்த பையை இங்க தானா வையிங்கெ. நா

போயி அவர சமாதானம் பண்ணி கூட்டி வரனும்.

நா வேணும்னா கூட வர்றேன் மாமா!

இல்லப்பு வேணாம், என்னாத்துக்கு நீங்க கடைய பாத்துக்கோங்க. வேகமாக புறப்பட்டு போனார் கோனார். அடுத்த இரண்டு மணி நேரத்தில் பாலகிரு‌ஷ்ணன் வீட்டில் கோனார் ஆஜர்.

மாப்புளெ நாள்னா இரவு பகல் வியாபாரம்னா லாபம் ந‌ஷ்டம் இதெல்லாம் இருக்கத்தான் செய்யும் வாழ்க்கையில் ஏற்றத்தாழ்வு மட்டுமில்லெ பெரச்சனை இன்பம், துன்பம் இது ரெண்டுந்தேன் பெரிய பெரச்சனை.

இப்போ, கூட பொறந்த அண்ணந் தம்பிகளுக்குள்ளயே ஒத்துமை இருக்கான்னா! ரெம்ப பேர்கிட்டெ இல்ல. வெட்டி குத்திகிட்டு சாகுறான். ஏன்? புருஞ்சுக்காத தன்மை தான் காரணம். விட்டு கொடுக்காத தன்மை தான் காரணம். இந்த மனுச வாழ்க்கையிலெ விட்டு குடுக்கிற தன்மை இல்லாம விரிசல் வந்துரக் கூடாதுன்னுதேன். விட்டு கொடுத்ததுனாலயே பெரிய ஸ்தானத்த உணர்த்தர ராமாயணமும், விட்டு கொடுக்காததுனாலயே வீனா அழிஞ்சு போன பாண்டவர் கதையான மகாபாரதத்தையும் எழுதி வச்சாக அம்ம பெரியவுக.

எங்கெயோ பெறந்த ஒரு ஆணும், எங்கெயோ பெறந்த ஒரு பெண்ணும், ஒரு மணநாள்லெ இணையறப்போ வெவ்வேறான குணாதிசயம் வெவ்வேறான குடும்ப சூழ்நிலை இத மறந்து ஒருத்தர் ஒருத்தர் புருஞ்சு ஒன்னு சேர்றதுக்கே, ஒரு வரு‌ஷத்துக்கு குறையாம ஓடிரும். அதனாலதேன் அம்ம சட்டத்துலயே கணவன் மனைவி விவாகரத்து பெறனும்னா, கொரஞ்சது ஒருவரு‌ஷம் இடைவெளி வேணும்னு சொல்லுது.

நீங்க என்னடான்னா கலியாணம் முடிஞ்சு, முழுசா முப்பது நாள்கோட முடியலெ, ஒருத்தர ஒருத்தர் மொகத்தகோட முழுசா பாத்துருக்க மாட்டிய. இப்புடி கோவப்பட்டு வந்துட்டியலெ.

கழுதை வாய்துடுக்கா பேசுச்சுன்னா பெட்டக் கழுதய பொடதிலெ ரெண்டு போட்டு மடக்கி வக்கிறத விட்டுபுட்டு இப்புடிய வாரது. மாமா நா வீட்லெ இல்லாதப்போ.

நா உசுரோட இருக்குறப்போவே இந்தக் கூத்துன்னா எங்கண்ணுக்கு பின்னாலெ என்னத்தெ நிர்வாகம் பண்ண போறிய? உங்கள நா மருமயனா ஏத்துகிட்டதெ ஊருக்குள்ள உங்க குணத்த நல்ல விதமா கேள்வி பட்டதாலதேன். பெறப்புடுங்கப்பு நேரமாகுது.

கோனாரோடு ஆத்தாவும் சேர்ந்துகொண்டு புத்திமதிகளை குவிக்க ஆரம்பித்தார்கள். ஒரு வழியாய் கோனாரும் பாலகிரு‌ஷ்ணனும் புறப்பட்டனர். கிராமத்தைக் கடந்து வண்டிச்சாலையில் முன்னும் பின்னுமாக வந்து கொண்டிருந்தனர். பின்னால் வந்த பாலகிரு‌ஷ்ணன் அருகாமையில் ஆள் நடமாட்டம் உண்டா என்று பார்த்தான். கண்ணுக்கு எட்டிய தூரம் வரை யாரும் இல்லை என்பதை உறுதி செய்த பின்

மாமா உங்ககிட்டெ கொஞ்சம் பேசணும் என்னப்பு?வீட்லெ அம்புட்டு புத்திமதி சொன்னிய ஆனா நா ஏன் வந்தேன்னு நீங்க ஒரு வார்த்த கூட கேக்கலை நானும் சொல்லலை.

என்னப்பு சொல்றிய? புருவம் நெரித்தார் கோனார்.

தகப்பெம் மாதிரி அம்புட்டு புத்திமதிய உரிமையோட சொன்ன உங்ககிட்டெ எம் மனசுக்குள்ளெ கெடக்குற உம்மைய மறைக்க விருப்பமில்லெ.

எதா யிருந்தாலும் சொல்லுங்க மாப்ளே!

தாமரையும் சங்கரநாதன் அண்ணனும் தப்பான பழக்கம் வச்சிகிட்டு இருக்காங்க. அதனாலதேன் நா வந்துட்டேன். தட்டு தடுமாறி சொல்லி முடித்தான் பாலகிரு‌ஷ்ணன். அந்த வார்த்தை கோனாரை நிலைகுலைய வைத்தது. கோபம் தலைக்கேற கண்கள் சிவந்து ரத்தக்கண்ணீர் ஊற்று போல மொட்டாக நிற்க. கை கால்கள்

நடுங்க பாலகிரு'ணனை திரும்பிப் பார்த்த கோனார்.

என்றா சொன்னே? நாம் பெத்த தங்கத்தையாடா தரங்கெட்டவன்னு சொ-ன்னே? என் நாத்தாவ பாத்தாடா நாய்ப்பெ-றாப்புன்னு சொன்னே? என் குலக்கொடிய பாத்தாடா கொண்டோடின்னு சொன்னே? கே-ானார் ஆவேசம் கொண்டவராக அதிகமான குரலில் கத்த பயந்து போன பாலகிரு'ணன்

மாமா வந்து

நிப்பாட்டுடா உம்பேச்சை ஆர பாத்து என்ன வார்த்தடா சொன்னே இந்த வார்த்தய எம் மக கேட்டிருந்தா இச்சனமே தூக்கமாட்டிகிட்டு உசுர மாச்சுருக்குமுடா. இந்த மட்டும் எம்மருமயன் கேட்டுருந்தா, உன்னைய துண்டு துண்டா வெட்டி, உப்பு கண்டம் போட்டுருப்பாருடா. அவரெ ஆருன்னு நெனச்செ, நா பெறாத மயன்டா. நேத்து வந்த பய நீ உனக்கு எப்புடிடா எங்க வம்மை வளமை தெரியும். நாங்க பரம்பரையா பழக்கக்காரங்கடா. எங்க பழக்கத்துக்கு ஒரு பாரம்பரிய பந்தமே இருக்குடா.

நல்லத நெனச்சு நல்ல வாழ்க்கை வாழ்ந்து நல்ல பழக்கவழக்கம் உள்ளவனுக்கு தான்டா பாக்குறப்போ நல்ல விசயம் தெரியும். உன்னை மாதிரி கெட்டதையே நெனச்சு கெட்ட வாழ்க்கெ வாழ்ந்த பயலுக்கு பாக்குறதெல்லாம் கெட்டதா தான்டா தெரியும். டேய்! எம்மக வா மூா வெட்டியா இருந்தாலும் பரவாயில்லே இன்னமும் நீ எம் படிவாச மிதிக்கப்படாதுடா. உன்னை மாதிரி ஒரு தரங்கெட்டவனுக்கு, எம்மக தாரமா இருக்குறத விட தாலியறுத்துட்டு நிக்கிறதே மேலுடா.

என்று வெறிபிடித்தவர் போல பேசிய சிவனாண்டிக் கோனார். அதே வேகத்தில் நடையைக் கட்டினார். அந்த நடையில் பூமி அதிர்வது போலதொரு பிரம்மை உண்டாகியது.

பார்த்தபடி நின்ற பாலகிரு'ணன் மனதில் அந்த பயம் உண்டாகியது. தன் மேலேயே தனக்கு சந்தேகம் உண்டாகியது. முனியன் எப்படிப்பட்டவன் ஒரு வேளை அவன் பொய் சொல்லி நம்மை குழப்பி விட்டானோ கடவுளே குழம்பியபடியே வீடு நோக்கி அன்ன நடை போட்டான் பாலகிரு'ணன்.

அந்தி மாலை நேரம் பனை மரங்களிடையே தள்ளாடி நடந்து வந்து கொண்டிருந்தார் கோனார் குடிக்க போயிருக்கிறார் என்பதை அறிந்த சங்கரநாதன் அவசரமாக புறப்பட்டு கள்ளுக்கடை நோக்கி வந்தான். எதிரே கோனார் தள்ளாடியபடி வந்தார். தாங்கி பிடித்தான் சங்கரநாதன்.

என்ன மாமா இது புது பழக்கம்.

தாங்க முடியலெ மாப்புளெ, தாங்க முடியலெ சாக்கடை பயலோட சகவாசம் வச்சிக்கிட்டா பரவால்லெ சம்பந்தம் பண்ணிப்புட்டனே அத நெனச்சாதான் தாங்க முடியலெ.மறக்க நெனச்சு குடிக்க வந்தேன் அப்பக்கோட மறக்க முடியலெயே! உலரினார் கோனார்.

என்ன மாமா சொல்றீங்க? மாப்ளே நீங்க எனக்கு என்ன வேணும்? தள்ளாடினார், கெட்டியாக பிடித்தான் என்ன மாமா புதுசா இல்ல சொல்லுங்க! மருமகன்.

இல்லெ இல்லெ மயன் நா பெறாத மயன் எனக்கு கொல்லி போடப்போற மயன். உங்கள போயி எம் மகளோட எனைச்சு பேசிப்புட்டான் மாப்ளே! போடா நாயி எம்மூஞ் சிலயே முழிக்காதடான்னு சொல்லிபுட்டு வந்துட்டேன்.

# மோசடியில் சிக்கும் கில்டு தலைவர் ஜக்குவார் தங்கம்!? அதிர்ச்சி வீடியோ வைரல்!

கில்டு என்று அழைக்கப்படும் தென்னிந்திய திரைப்படம் மற்றும் தொலைக்காட்சி தயாரிப்பாளர்கள் சங்கம் (பழைய எண் 5 ) (புது எண் 19 )ராம்ஸ் பிளாட் டீ1. ஜெகதீஸ்வரன் தெரு, தி நகர் சென்னை 17 என்ற முகவரியில் செயல்பட்டு வருகிறது.

நீதிபதிகள் உத்தரவுபடி இந்த சங்கத்தில் 1500க்கு மேல் நிரந்தர வாக்களிக்கும் உறுப்பினர்கள் மற்றும் மொத்த உறுப்பினர்கள் 4000 க்கு மேல் இருக்கின்றனர். இந்த சங்கத்தில் சுமார் 5 கோடிக்கு மேல் பணம் இருப்பதாகவும் கடந்த ஆறு வருடங்களுக்கு மேல் சங்கத்தில் இருந்த பல கோடி ரூபாயை தலைவர் ஜக்குவார் தங்கம் கையாடல் செய்துள்ளதாகவும் உடனடியாக சங்கத்திற்கு தேர்தல் வைக்குமாறும் செயலாளர் மற்றும் நூற்றுக்கும் மேற்பட்ட உறுப்பினர்கள் சார்பில் நீதிமன்றத்தில் வழக்கு தொடரப்பட்டு வழக்கு விசாரணையில் இருந்து வருகிறது.

அதே சமயத்தில் தலைவர் ஜாக்குவார் தங்கம்மீது செயலாளர் மற்றும் உறுப்பினர்கள் தி நகர் மாம்பலம் காவல் நிலையத்தில் புகார் கொடுத்த வண்ணம் இருக்கின்றனர்.

அது என்னவென்றால் கில்டு சங்கத்திற்கு தலைவர் செயலாளர் தவிர உறுப்பினர்கள் யாரும் வரக்கூடாது என்று நீதிமன்றத்தில் தடை உத்தரவு ஜாக்குவார் தங்கம் பெற்றிருப்பதாகவும், தலைவர் ஜாக்குவார் தங்கம் பல மாதங்களாக கோர்ட் உத்தரவுபடி சங்கத்தை திறக்காமல் இருந்துவிட்டு தற்போது ஏதோ உள்நோக்கத்தோடு உறுப்பினர்கள் யாரும் வராத சங்கத்தை உடனடியாக திறக்க வேண்டும் என்று ஜாக்குவார் சொன்னதற்கு மறுப்பு தெரிவித்து செயலாளர் துரைசாமி அவர்கள் உறுப்பினர்களும் சங்கத்திற்குள் வரவேண்டும் அப்பொழுதுதான் சங்கத்தை திறக்கவேண்டும் என்றார். கடந்த பல மாதங்களாக செயலாளர்களும் உறுப்பினர்களும் கோர்ட்



உத்தரவுபடி சங்கத்தை திறக்க வேண்டும் என்று பல நாட்களாக சொல்லியும் சங்கத்தை திறக்காமல் இருந்த தி நகர் போலிஸ் அதிகாரிகள் ஜாக்குவார் தங்கத்திற்கு ஆதரவாக ஒரு குறிப்பிட்ட சமுதாயத்தை சார்ந்த வழக்கறிஞர்கள் காவல் நிலையத்திற்கு முன்பு மறியல் செய்வோம் என்ற அழுத்தின் பேரில் தி நகர் மாம்பலம் காவல் நிலைய போலிஸ் அதிகாரிகள் கில்டு சங்கத்தின் தலைவர் செயலாளர்கள் துரைசாமி, ஜம்பு ஆகியோரை அழைத்து துணை ஆணையர் தலைமையில் மாம்பலம் R1 காவல் நிலையத்தில் அமைதி பேச்சுவார்த்தை நடத்தப்பட்டது. அந்த அமைதி பேச்சுவார்த்தை நடந்தபோது செயலாளர் துரைசாமி அவர்கள் போலிஸ் அதிகாரிகளிடம் பல மாதங்கள் கோர்ட் உத்தரவுபடி சங்கத்தை திறந்து விடுங்கள் என்று சொல்லிய போதெல்லாம் திறக்க-ாமல் தற்போது கில்டு உற்ப்பினர்கள் வரக்கூடாது தவைவர் செயலாளர்கள் மட்டும்தான் சங்கத்தில் உள்ளே இருக்க வேண்டும் என்றால் உறுப்பினர்களே வராத சங்கத்தில் தலைவர்,செயலாளர்களுக்கு என்ன வேலை? என்ற கருத்தை தெரிவித்தார். இதற்கு துணை ஆணையர் அவர்கள் நீதிமன்ற உத்தரவு இப்படித்தான் உள்ளது என்று கூறினார். இந்த உத்தரவை பெற்றது ஜாக்குவார் தங்கம்தான் என்பது குறிப்பிடத்தக்கது.

அதன்பிறகு சங்கத்தை திறந்தே ஆகவேண்டும் என்று துணை ஆணையர் கண்டிப்புடன் கூறியதால் சில நிபந்தனைகளுக்குட்பட்டு

சங்கத்தை திறப்பது என முடிவு செய்யப்பட்டது. கடந்த எட்டு மாதங்களுக்கு மேலாக சங்க அலுவலகம் பூட்டப்பட்டு அலுவலக சாவிகள் அனைத்தும் ஜாக்குவார் தங்கம் வசமே இருந்ததால் கில்டில் உள்ள பொருட்கள் ஆவணங்கள் கம்பியூட்டர் Hard Disc போன்றவைகளை ஆய்வு செய்வதென முடிவு செய்யப்பட்டது. ஆய்வு செய்து முடித்தபிறகு 8-7-24 திங்கள்கிழமையன்று CC TV கேமராக்களை சரி செய்து அதன் செயல்பாடுகளை தலைவர் ஜாகாகுவார் தங்கம் செயலாளர்கள் துரைசாமி, ஜம்பு ஆகியோர் கண்காணிப்புக்கு இணைப்பு கொடுக்கவேண்டும் என்றும் அதன்பிறகு 10-7-24 புதன்கிழமை முதல் சங்க அலுவலகம் காலை 10 மணி முதல் மாலை 5 மணி வரை திறந்திருக்க வேண்டும் என்று முடிவு செய்யப்பட்டது.

அதன்படி 7-7-24 சனிக்கிழமை அன்று R1 மாம்பலம் காவல் நிலைய துணை ஆணையர். காவல் ஆய்வாளர் மற்றும் 10 க்கும் மேற்பட்ட காவலர்கள் முன்னிலையில் தலைவர் ஜாக்குவார் தங்கம் செயலாளர்கள் துரைசாமி ஜம்பு மற்றும் இவர்களின் வழக்கறிஞர்கள் மூவர் வைத்து திறப்பதற்கு முயன்றபோது செயலாளர் துரைசாமி அவர்கள் சங்கத்தின் உள்ளே பூட்டப்பட்ட அனைத்தையும் திறப்பதற்கான சாவிகள் தயார் நிலையில் உள்ளதா எனக் கேட்டபோது பீரோவை திறக்கும் சாவி மட்டும் சங்கத்தின் மேலாளர் சுஜிதா வசம் உள்ளது. இன்னும் பத்து நிமிடத்தில் வந்து விடுவதாக கூறினார் ஜாக்குவார் தங்கம். அந்த சாவியும் வந்த பிறகு சங்கத்தை திறக்கலாம் என்று துரைசாமி சொன்னதற்கினங்க சாவி வரும்வரை காத்திருந்து மேனேஜர் சுஜிதா வந்தபிறகு சங்கம் திறக்கப்பட்டது.

சங்க அலுவலகத்தின் ஒரு அறையை திறக்க முற்பட்டபோது ஜாக்குவார் தங்கம் வைத்திருந்த சாவியை கொண்டு பூட்டை திறக்க முடியவில்லை. பிறகு வெளியிலிருந்து பூட்டு திறக்கும் நபரை வைத்து அனைவரின் முன்னிலையிலும் அறை திறக்கப்பட்டது. அறை திறந்ததும் திருமதி. சுஜிதா வசம் இருந்த பீரோ சாவியை வாங்கி ஜாக்குவார் தங்கம் பீரோவை திறந்து பீரோவில் இருந்த சங்க அலுவலகத்திற்கு சொந்தமான பத்திரங்கள் மற்றும் இதர சில ஆவணங்களை எடுத்து எல்லோர் முன்னிலையிலும் காண்பித்தார். பிறகு அவைகளை எடுத்து அதே பீரோவில் வைத்து பூட்டிவிட்டு சாவியை தன் வசம் வைத்துக் கொண்டார். பிறகு மற்ற அறைகளின் பூட்டை திறந்தும் மற்ற ஆவணங்கள் பார்க்கப்பட்டன. இவைகளை பார்த்து முடித்த பிறகு சங்க மேலாளர் ஒரு வெள்ளை பேப்பரில் சில கணக்குகளை காண்பித்து அந்த கணக்குப்படி ஏற்கனவே திறந்து ஆவணங்களை பார்வையிட்ட பீரோவில் ரூ. 13,90,000.∴- (ரூபாய் பதிமூன்று லட்சத்து தொண்ணூறாயிரம் மட்டும்) ரொக்கமாக இருப்பதாக கூறினார். பிறகு மீண்டும் பீரோ திருமதி. சுஜிதா அவர்களால் திறக்கப்பட்டது. பீரோவின் உள்ளே உள்ள ஒரு லாக்கருக்கான சாவி கில்டு தலைவர் ஜாக்குவார் தங்கத்தின் பராமரிப்பில் உள்ள ஒரு மேஜையின் ட்ராயரில் இருந்தது. அந்த ட்ராயர் திறப்பதற்கான சாவியும் ஜாக்குவார் தங்கம் தன்னிடமிருந்து திருமதி. சுஜிதா மேலாளரிடம் கொடுத்து திறக்க சொல்லி அந்த சாவியை எடுத்து பீரோவின் லாக்கரை திறந்தார். லாக்கர் திறக்கப்பட்டதும் உள்ளே இரண்டு கவரில் வைத்திருந்த சங்கத்தின் நிதி ரொக்கமாக ரூ. 13.90.000.∴- ஐ காணவில்லை என்று கூறினார்.

பிறகு ஆய்வாளர் அவர்கள் பீரோ சாவி எப்போழுதும் யார் வசம் இருக்கும் என்று கேட்டதற்கு மேலாளர் சுஜிதா வசம் இருக்கும் என்றும் பீரோவில் உள்ள லாக்கரை திறக்கும் சாவி தலைவர் ஜாக்குவார் தங்கம் வசம் இருக்கும் என்று இருவரும் அனைவர் முன்னிலையிலும் கூறினார். பிறகு பீரோவில் பணம் ரூ. 13,90,000.∴- ஐ உள்ளே வைத்தது யார் என்று திருமதி. சுஜிதாவிடம் கேட்ட போது அந்த பணத்தை திருமதி. சுஜிதா மற்ற சங்க பணியாளர்கள் திரு வினோத் மற்றும் புவனா ஆகியோர் தலைவர் ஜாக்குவார் தங்கத்தின் முன்னிலையில் வைத்ததாக கூறினார்கள். ஆனால் அந்த தொகை தற்போது காணவில்லை என்று சங்கத்தின் தலைவர் ஜாக்குவார் தங்கம் மற்றும் மேலாளர் சுஜிதா ஆகிய இருவரும் கூறகிறார்கள். நிச்சயமாக இந்த தொகை

ரூ 13,90,000 திருடப்பட்டுள்ளது என்பது உறுதியாகிறது. ஏற்கனவே சங்கத்தில் பிரச்சினை ஏற்பட்டு சங்க அலுவலகத்தை மாம்பலம் காவல் நிலைய அதிகாரிகளால் பூட்டப்பட்ட பிறகு திடீரென ஒரு நாள் தலைவர் ஜாக்குவார் தங்கம் காயத்திரி சுஜிதா மற்றும் சகாயராஜ் சங்க உறுப்பினர் மதுசூதனரெட்டி ஆகியோர் அடையாளம் தெரியாத சுமார் 25 அடியாட்களுடன் பூட்டியிருந்த சங்க அலுவலகப் பூட்டை உடைத்து சங்கத்திலிருந்து சங்கத்தின் பணம் மற்றும் இதர பொருட்களை சூறையாடி சென்றதை அங்குள்ள CCTV ஆதாரங்களுடன் மாம்பலம் காவல் நிலையத்தில் புகார் கொடுக்கப்பட்டுள்ளது. எனவே ஐயா அவர்கள் மேலே குறிப்பிட்டுள்ள புகாரின் அடிப்படையிலும் இன்றி பணம் காணவில்லை என்பது நிரூபணமாகியுள்ள நிலையில் 13.90 லட்சத்தை திருடிய நபர்கள் மீது தகுந்த நடவடிக்கை எடுக்க வேண்டும் என கில்டு செயலாளர்கள் நிர்வாகிகள் செயற்குழு உறுப்பினர்கள் மற்றும் உறுப்பினர்கள் புகார் கொடுத்த வண்ணம் இருக்கின்றனர்.

போலிஸ் அதிகாரிகள் பல மாதங்களாக சும்மா இருந்துவிட்டு இப்போது சங்கத்தை திறந்தே ஆகவேண்டும் என்று முனைப்புடன் செயல்பட்டது ஏதோ உள்நோக்கம் இருக்கிறது என்று கில்டு உறுப்பினர்கள் சந்தேகப்படுகிறார்கள்.

சங்கத்தின் விதிமுறைகளுக்கு மாறாக தலைவர் ஜாக்குவார் தங்கம் செயல் பட்டிருப்பதாக. உறுப்பினர்கள் குற்றச்சாட்டை எழுப்பி உள்ளனர். போலிஸ் அதிகாரிகள் ஜாக்குவார் தங்கம் ஏதோ உள்நோக்கத்துடன் குற்றச்சாட்டை கூறியதை புரிந்துகொண்டு போலிஸார் உண்மையிலேயே 13.90 லட்சம் திருடுபோனதா?என விசாரணை நடத்தி வருகின்றனர்

இந்த நிலையில் கில்டு சங்கத்தில் கொள்ளை அடிக்கப்பட்ட 13.90 லட்ச ரூபாய் தொடர்பாக மாம்பலம் காவல் நிலையத்தில் (07.̇.07.̇.24) புகார் கொடுத்துள்ளார் கில்டு உறுப்பினர் சுரேஷ்'குமார். சுரேஷ்குமார் காவல் நிலையத்தில் கொடுத்துள்ள புகாரில் கில்டு சங்கத்தில் கொள்ளையடிக்கப்பட்ட 13.90 லட்சத்தை உடனடியாக விரைந்து கண்டுபிடிக்கவேண்டும் என்றும் பணத்தை திருடிய உண்மையான குற்றவாளியை கண்டுபிடித்து அவர்மீது தக்க நடவடிக்கை உடனடியாக எடுக்குமாறும் அந்த புகாரில் தெரிவிக்கப்பட்டுள்ளது.

திருடத் தெரியாதவன் தலையாரி வீட்டில் நுழைந்து கொண்டது போல் என்ற பழமொழிக்கு ஏற்றார்போல் தலைவர் என்று சொல்லிக் கொள்ளும் ஜாக்குவார் தங்கம் 13.90 லட்சம் ரூபாயை சங்கத்தில் திருடி சென்று விட்டார்கள் என்று தன் வாயால் கூறி மாட்டிக் கொண்டு என்ன செய்வது என அறியாது தற்போது முழித்துக் கொண்டிருக்கிறார் அது மட்டுமில்லாமல் ஒரு சங்க அலுவலகத்தில் 13.90 லட்சம் ரூபாய் ரொக்கமாக உறுப்பினர்கள் பணம் எப்படி வந்தது அந்தப் பணம் யார்? யார்? இடம் வசூல் செய்யப்பட்டது அந்த பணம் ரொக்கமாக வசூல் செய்யப்பட்டதா? இல்ல வங்கியில் இருந்து எடுக்கப்பட்டதா? இந்த விவரம் எதையுமே தலைவராக இருக்கும் ஜாக்குவார் தங்கம் இதுவரைக்கும் வெளிப்படையாக கூறவில்லை. எதிர் தரப்பினரை சங்கத்திற்குள் நுழைய விடாமல் பணம் திருடு போனதாக கூறி நூதன முறையில் ஒரு பொய்யை கட்டவிழ்த்து விட்டு தற்போது அந்த வலையில் தானே சிக்கிக் கொண்டுள்ளார் ஜாக்குவார் தங்கம் என சங்கத்தில் உள்ள பல உறுப்பினர்கள் தற்போது தங்களது சமூக வலைதளங்களில் பதிவிட்டு வருகின்றனர்.

எது எப்படியோ 13.90 லட்சம் கொள்ளையடிக்கப்பட்ட இந்த குற்றச்சாட்டால் கில்டு சங்கத்திற்கு ஒரு நல்ல விடிவு காலம் ஏற்படும் என்றும் விரைவில் தேர்தல் நடக்க வேண்டும் என்றும் உறுப்பினர்கள் அனைவரும் எதிர்பார்த்துக் கொண்டு காத்திருக்கின்றனர்.

இனிமேலும் தலைவராக இருக்கும் ஜாக்குவார் தங்கம் ஒரு பொய்க்கு நூறு பொய் சொல்லி தப்பித்துக் கொள்ளலாம் என நினைத்தால் யானை தன் தும்பிக்கையால் மண்ணை தன் தலையில் போட்டது போல்

ஜாக்குவார் தங்கம் தன் தலையில் மொத்த குற்றச்சாட்டையும் தூக்கி தானே வைத்துக் கொல்ல வேண்டிய நிலை தற்போது ஏற்பட்டுள்ளது என கில்டு சங்க நிர்வாகிகள் கூறுகின்றனர். கில்டு சங்கத்திற்கு நீதிமன்றத்தில் நீதி கிடைக்குமா என பொறுத்திருந்து பார்ப்போம்

சங்க பைலா சங்க பைலா என்று சொல்லும் ஜாக்குவார் தங்கம் கில்டு உறுப்பினர்களிடமிருந்து வசூலித்த பணத்தை ஏன் கில்டு அக்கவுண்டில் கட்டவில்லை என்ற கேள்வியும் எழுப்பி உள்ளனர். அதுமட்டும் அல்லாமல் RDO ஆதிகாரி விசாரனையின் போது இருதரப்பி-னரும் கில்டு சங்கத்தை ஆளுக்கொரு பூட்டு-போட்டுள்ள நிலையில் ஜாக்குவார் தங்கம் இரு பூட்டையும் உடைத்து பல பொருட்களை எடுத்து சென்றதாக செயலாளர்கள் காவல் நிலையத்தில் புகார் கொடுத்து ஜாக்குவார் தங்கம் மீது FIR போடப்பட்டது. அந்த FIR மீது இன்று வரை தி நகர் போலிஸ் அதிகாரிகள் நடவடிக்கை எடுக்காமல் இதுநாள்வரை பல மாதங்களாக சங்கத்தை திறக்க செயலாளர்கள், உறுப்பினர்களும் சொல்லியும் கேட்காத தி நகர் போலிஸ் அதிகாரிகள் இப்போது மட்டும் சங்கத்தை கோர்ட் உத்தரவுபடி உறுப்பினர்கள் உள்ளே செல்ல முடியாத சங்கத்தை திறப்போம் என்று சொல்வது புரியாத புதிராக உள்ளது.

உறுப்பினர்கள், நிர்வாகிகள் சங்கத்திற்குள் வரவேண்டும் என்றால் கோர்ட் உத்தரவு வாங்கி வாருங்கள் என்று சொல்கின்றனர் போலிஸ் அதிகாரிகள்.

கில்டுக்கு தேர்தல் நடத்தவேண்டும் என்று செயலாளர்கள், நிர்வாகிகள், செயற்குழு உறுப்பினர்கள். கில்டு உறுப்பினர்கள் இன்று வரை போராடி வருகின்றனர். ஆனால் ஜாக்குவார் தங்கம் தேர்தலை நடத்தவிடாமல் உறுப்பினர்களின் பணத்தை எடுத்து பல லட்சங்களை கோர்ட்டு வழக்குக்காக செலவு செய்துகொண்டு வருகிறார் இது மிகவும் தவறு என்றும் சந்தா கட்டிய பணமெல்லாம் கோர்ட்டுக்கே செலவிடப்படுகின்றதே என்றும் தலைவர் ஜாக்குவார் மீது கடும் கோபத்தில் உள்ளனர் 4000 த்துக்கும் மேல் உள்ள கில்டு உறுப்பினர்கள்.



செயலாளர் துரைசாமி அவர்களிடம் இதுகுறித்து கேட்டபோது தற்போது வழக்கறிஞர் முலம் புதிதாக இரண்டு நீதிபதிகளை நியமித்து நடப்பு வருஷ-த்துக்கு சங்க பைலாபடி தேர்தல் நடத்தவேண்டும் என்று கடைசியாக நீதிபதிகள் போட்ட ஆர்டர்படி தேர்தலை நடத்த வழக்கறிஞரிடம் மனுபோட சொல்லியிருக்கோம். கூடிய விரைவில் தேர்தல் நடக்கும் என்றார்.

அரசுக்கு வேண்டுகோள்

மாண்புமிகு தமிழக முதல்வர் பார்வைக்கும் மாண்புமிகு பதிவுத்துறை அமைச்சர் மூர்த்தி அவர்களும் இந்த விஷயத்தை கையிலெடுத்து கில்டு சங்க உறுப்பினர்களையும் அவர்கள் கட்டியுள்ள பணத்தையும், கட்டிக் கொண்டிருக்கிற பணத்தையும் காப்பாற்றுமாறும் கில்டு உறுப்பினர்கள் அனைவரும் தங்களிடம் வேண்டுகோள் வைக்கின்றனர்.

தயவு செய்து அன்பு கூர்ந்து இதுபோல பல சங்கங்கள் பதவி காலம் முடிந்தும் பதவியியை விட்டு விலகாமல் பணத்தை வீண் விரயம் செய்து வருகின்றனர். சங்கத்தில் உள்ள பல நேர்மையானவர்கள் கோர்ட் உதவியை நாடியும் உடனடியாக தேர்தல் நடத்த முடியாமல் பல வருடங்கள் கோர்ட் மூலம் முடிவு எட்டப்படாமல் லழக்கு வழக்கு என்று பல வருடங்களாக போய் கொண்டிருக்கிறது. இதுபோல சங்கஙாகளை சங்க பைலா படி ஒரு வருடத்தில் அல்லது இரண்டு வருடத்-தில் தேர்தல் நடக்காத சங்கத்தை வழக்கு முடியும் வரை அரசே Administrator போட்டு நிர்வாகம் செய்து சங்க உறுப்பினர்களை காப்பாற்றுமாறு அச்சாரம் மாத இதழ் சார்பாக மிகவும் பணிவண்புடன் கேட்டுக்கொள்கிறேம்




P.G..ராமச்சந்திரன் தயாரிப்பில் சைனு சாவக்காடன் இயக்கத்தில் விசித்திரன் ஆதேஷ்' பாலா ரூபேஸ்வரன் கொட்டாச்சி சர்மிளா சின்ராசு. P.G. ராமச்சந்திரன் மற்றும் பலர் நடித்து ஜூலை 12 ல் வெளியாகும் படம் RK வெள்ளிமேகம்

கதை

இரண்டு இளம் எழுத்தாளர்கள் இயக்குனர் ஆர் கே என்பவரிடம் கதை சொல்ல செல்கிறார்கள். கதை சொல்லிவிட்டு அந்த இரு இளைஞர்கள் வந்த பிறகு இயக்குனர் ஆர்கே வீட்டில் பல அமானு'ஷ்'ய விஷ'யங்கள் நடக்கின்றது. அந்த அமானு'ஷ்' விஷயங்களுக்கும் இந்தகதைக்கும் அந்த இளைஞர்களுக்கும் சம்பந்தம் இருக்கா, இல்லையா? என்பதே படத்தின் திரைக்கதை. அது மட்டும் இல்லாமல் இயக்குநர் ஆர்கே என்பவர் யார்? என்பதை விவரிப்பது இன்னொரு கிளைக்கதை

விசித்திரன் ஆதேஷ்' பாலா ரூபேஸ்வரன் கொட்டாச்சி சர்மிளா சின்ராசு. P.G. ராமச்சந்திரன் என இதில் நடித்த அனைவருமே கொடுக்கப்பட்ட கதாபாத்திரத்தை மிகவும் சிறப்பாக செய்துள்ளனர். டான்ஸ் அலெக்சின் ஒளிப்பதிவு அருமை. சாய் பாலனின் இசையில் பாடல்களும் பிண்ணனி இசையும் ரசிக்க வைகாகிறது. R யாது கிருஷ்'ணனின்நல்லகதையைகோவைபாபுநன்றாக திரைக்கதையமைத்து நன்றாக வசனம் எழுதியுள்ளார். ஹரி G நாயர் எடிட்டிங் நன்று.

இயக்குநர் சைனு சாவக்காடன் சஸ்பென்ஸ் திரில்லர் கதையை எல்லோரும் ரசிக்கும்படி சுவாராஸ்யமாக சொல்லியுள்ளார். பாராட்டுக்கள்.

## திரை விமர்சனம்




### இந்தியன் 2 படத்தின் கதை

ஷங்கர் இயக்கத்தில் 1996-ம் ஆண்டு வெளியான படம் இந்தியன். கமல்ஹாசன் இரட்டை வேடத்தில் நடித்திருந்த இந்த படத்தில் மனிஷா கொய்ராலா, சுகன்யா, கவுண்டமணி, செந்தில், நெடுமுடி வேனு, மனோரமா உள்ளிட்ட பலர் நடித்திருந்தனர். வசூல் ரீதியிலும் விமர்சன ரீதியிலும் இந்த படம் நல்ல வரவேற்பு கிடைத்தது. இந்த படம் பாக்ஸ் ஆபிஸில் மிகப்பெரிய வெற்றி படமாக அமைந்தது.

இந்தியன் 2 படத்தில் சித்தார்த், எஸ்.ஜே. சூர்யா, காஜல் அகர்வால், ரகுல் ப்ரீத் சிங், பாபி சிம்ஹா, ப்ரியா பவானி சங்கர், விவேக் உள்ளிட்ட பலர் நடித்துள்ளனர். இந்த ஆண்டின் மிகவும் எதிர்பார்க்கப்படும் படமாக உள்ளது இந்தியன் 2

சமூக ஊடகங்களில் வைரலாகி வருகிறது இந்தியன் 2 படத்தின் கதை

ஊழலுக்கு எதிராகப் போராடும் ஒரு இளைஞருக்கு (சித்தார்த்) ஆதரவாகப் போராட சேனாபதி (கமல்ஹாசன்) இந்தியாவுக்குத் திரும்புவதுதான் "இந்தியன் 2" படத்தின் கதை என்கின்றனர்

அனிருத் இசையில் உருவாகியுள்ள பாடல்கள் ரசிகர்கள் மத்தியில் பெறும் வரவேற்பை பெற்றுள்ளது. "

இந்தியன் 2 சமகால அரசியலை விமர்சிக்கும் வகையில் இருக்கும் என்று

எதிர்பார்க்கப்படுகிறது. எனினும் இந்த படம் ஏதேனும் சர்ச்சையை கிளப்புமா? என்பதை ஜூலை 12 வரை பொறுத்திருந்துதான் பார்க்க வேண்டும். இயக்குநர் 'ங்கரின் நெடுநாளைய உழைப்பும் கமலின் நடிப்பும் காண ரசிகர்கள் ஆவலுடன் காத்திருக்கின்றனர். பெரும் பொருட் செலவில் தயாரித்துள்ளனர் லைக்கா நிறுவனம்.

ரெட்ஜெயன்ட் வெளியிடு.

**இந்தியன் தாத்தா குறித்து சுவாராஸ்ய பதில்**

ஷங்கர் இயக்கத்தில் கமலஹாசன் நடித்த இந்தியன் 2 படம் வரும் ஜூலை 12ஆம் தேதி திரைக்கு வருகிறது

இதற்கு முன்பு ஷங்கர் இயக்கத்தில் கமல்ஹாசன் நடித்த இந்தியன் படத்தின் முதல் பாகம் கடந்த 1996 இல் திரைக்கு வந்தது இதில் இந்தியன் தாத்தா சேனாபதி 1918 இல் பிறந்ததாக சொல்லப்பட்டது அதன்படி தற்போது இந்தியன் தாத்தாவுக்கு 106 வயதாகிறது.

இந்த வயதில் தாத்தா எப்படி அதிரடியாக சண்டை போட முடியும் என்ற என்று ஷங்கரிடம் கேள்வி கேட்கப்பட்டது இதற்கு ஷங்கர் பதில் தற்போது சீனாவில் லூசி ஜியோன் என்ற மார்ஷியல் ஆர்ட்ஸ் மாஸ்டர் இருக்கிறார். 106 வயதான அவர் இன்றும் மார்ஷியல் ஆர்ட்ஸ் பயிற்சி மேற்கொள்கிறார்.

அதிரடியாக பறந்து சண்டை போடுகிறார். இந்தியன் தாத்தா சேனாபதி வர்மக்கலை மாஸ்டர். உணவில் கட்டுப்பாடுடன் இருந்து யோகா, தியானம் செய்வார் ஒழுக்கத்துடனும் நேர்மையுடனும் இருப்பார். இதனால் வயது என்பது ஒரு பொருட்டல்ல. எவ்வளவு கடினமான சண்டையாக இருந்தாலும் அதை அவரால் எளிதாக மேற்கொள்ள முடியும் என்றார். அவரது சுவாரஸ்யமான பதில் கமலஹாசனின் தீவு ரசிகர்களை திருப்தி செய்துள்ளதால் இது சமூக வலை வைரலாக்கியுள்ளது.

**திரை விமர்சனம்**

**சென்னை ஆழ்வார்பேட்டை போக்குவரத்து தீவிற்கு இயக்குனர் சிகரம் "கே.பாலச்சந்தர் போக்குவரத்து தீவு" என பெயர் வைக்கிறது தமிழக அரசு!**



கமல்ஹாசன் அலுவலகத்தில் நடைப் பெற்ற கே.பாலசந்தர் 94"வது பிறந்தநாள் விழா

ரஜினிகாந்த், கமல்ஹாசன், சிவக்குமார், சிரஞ்சீவி, மம்மூட்டி போன்ற முக்கிய நடிகர்கள், நடிகைகள், திரையுலக பிரபலங்களின் கடிதத்தோடு, இயக்குநர் சிகரம் கே.பாலசந்தர் வாழ்ந்த பகுதியில், "கே.பாலசந்தர் சாலை" என பெயர் சூட்டவும், அவரின் திருவுருவ சிலை வைக்கவும் கோரிக்கையை, கே.பாலசந்தர் ரசிகர்கள் சங்கத்தின் பொதுச்செயலாளர் கவிதாலயா வீ.பாபு கொடுத்த கடிதம் தற்போது தமிழ்நாடு அரசு பரிசீலனை செய்து, பெருநகர சென்னை மாநகராட்சி, முதன்மைச் செயலர் ஆணையரின் கருத்து அரசால் கவனமாக விரிவான ஆய்வுக்கு பின், பெருநகர சென்னை மாநகராட்சி, மண்டலம்-9, பகுதி-25, கோட்டம் 123-ல் உள்ள லஸ் சர்ச் சாலையில் காவேரி மருத்துவமனை அருகே, சுமார் 1000 சதுர அடி அளவில் அமையப் பெற்றுள்ள போக்குவரத்து தீவு என்று அமைந்துள்ள இடத்தினை, இயக்குநர் சிகரம் "கே.பாலசந்தர் போக்குவரத்து தீவு" என்று பெயர் மாற்றம் செய்து பெருநகர சென்னை மாநகராட்சி கூடுதல் தலைமைச் செயலாளர், ஆணையர் அவர்களுக்கு அனுமதி வழங்கி தமிழ்நாடு அரசு ஆணையிட்டுள்ளது.

# தேனிசைத் தென்றல் தேவா அவர்களின் குரலில் வீரநகரம்



அன்னை வேளாங்கண்ணி மாதா பிலிம்ஸ் தயாரிப்பில் வினோத்குமார் அவர்கள் இயக்கி நடித்த வீரநகரம் திரைப்படத்திற்கு முகேஷ் முனுசாமி இசையில் தேனிசைத் தென்றல் தேவா அவர்கள் குத்து பாடல் ஒன்றை பாடியுள்ளார் மற்றும் நடிகர் விஜய்ஆண்டனி நடித்த சலிம் திரைப்படத்தில் மஸ்காரா போட்டு மயக்குறியே பாடலில் நடனமாடிய நடிகை அஸ்மிதா அவர்கள் இப்பாடலுக்கு நடனமாடவுள்ளார் இந்த பாடலில் நூற்றுக்கணக்கான நடிகர்கள் நடிக்கவுள்ளதாகவும் மிக பிரமாண்டமாக இப்பாடலை எடுக்க திட்டமிட்டுள்ளதாகவும் இயக்குனரும் கதாநாயகனுமான வினோத்குமார் தெரிவித்தார் இத்திரைப்படத்தில் நான்கு வில்லன்கள் நடித்துள்ளனர் முக்கிய வில்லனாக மைக்கேல்ராஜ் அவர்கள் நடித்துள்ளார் வில்லன் நடிகர் சாய்தீனா அவர்கள் சுவாரசியமான காட்சியில் நடிக்கவுள்ளார்

மற்றும் கதாநாயகியாக சாராமோனு மற்றும் ரோஸ் நடித்துள்ளனர் காமெடியில் லொள்ளு சபா மனோகர் மற்றும் திருப்பாச்சி பெஞ்சமின் கலக்க முக்கிய கதாபாத்திரத்தில் சுப்ரமணியபுரம் டும்கான் மாரி விஸ்வாசம் சிட்டுக்குருவி பாட்டி ஈரோடு சேகர் விஜய் சங்கர் லட்சுமணன் ஆகியோர் நடித்துள்ளனர் மற்றும்
ஒளிப்பதிவு விஜய் வெங்கட்
எடிட்டிங் ரத்தினம்பாலாஜி
பாடல்கள் திருண்சூர்யா
வடிவம் திராவிடநேசன்
ஒப்பனை நந்தினி
நடனம் நவீன்குமார் ஹரி
pro மணிகண்டன் ஆகியோர் பணிபுரிந்துள்ளனர்

இப்படத்தின் 1st look poster ஐ திரைப்பட ஜாம்பவான் டி ராஜேந்தர் மற்றும் திரைப்பட நடிகர்கள் மற்றும் அரசியல் தலைவர்கள் வெளியிட்டனர்

இத்திரைப்படத்தின் ட்ரெய்லர் மற்றும் ஆடியோ வெளியீடு விரைவில் திரை பிரபலங்கள் மற்றும் அரசியல் தலைவர்கள் முன்னிலையில் மிகப் பிரமாண்டமாக நடைபெறும் என்பதனை இயக்குனரும் கதாநாயகனுமான வினோத்குமார் அவர்கள் தெரிவித்தார்



# வாழை இலையின் நடுவில், கோடு ஏன்?

-பாப்பனப்பட்டு வ.முருகன்

வாழை இலையின் நடுவில், ஒரு கோடு போட்டு இரண்டாக பிரித்து வைத்திருப்பது போல் உள்ளதே, அந்தக் கோட்டைப் போட்டது யார் எனத் தெரியுமா?

இப்போது தெரிந்து கொள்ளுங்கள்.

புராண காலங்களில், வாழை இலையின் நடுவில், அப்படியொரு கோடு என்பதே கிடையாதாம். அக்கோடு, ராமாயண காலத்தில் தான் ஏற்பட்டதாம்.

ராமாயண காலத்தில், ஒருமுறை ராமன் சாப்பிடும்போது, அனுமனையும் தன்னுடன் ஒரே இலையில் சாப்பிடச் சொன்னாராம்.

இருவரும் எதிர் எதிராக அமர்ந்திருந்தார்களாம். அப்போது தான், அணில் முதுகில் கோடு போட்டது போலவே, வாழை இலையின் நடுவிலும், தனது கையால் ஒரு கோட்டைக் கிழித்தாராம் ராமன்.

ராமர் இருந்த பக்கத்தில், மனிதர்கள் விரும்பிச் சாப்பிடும் உணவு வகைகளும், அனுமன் இருந்த எதிர்ப் பகுதியில், குரங்குகள் விரும்பிச் சாப்பிடும் காய்கறிகளும் பரிமாறப்பட்டதாம்.

அப்படிப் பரிமாறிய அந்தப் பழக்கம் தான், இன்றும் நம்மிடையே தொன்று தொட்டு தொடர்ந்து வருகிறதாம்.

வாழை இலையில் சாப்பிடும் எல்லோருக்கும், சாப்பிடுவதற்கு முன், ஒரு நொடிக் குழப்பம் ஒன்று வந்தே தீரும். அது என்னவெனில், “பரிமாறும் போது இலையை எப்படிப் போடுவது? இலையின் நுனி, இடது பக்கமாக வர வேண்டுமா? அல்லது வலது பக்கமாக இருக்க வேண்டுமா?“ என்பது தான் அக்குழப்பம்.

குழப்பமே வேண்டாம். இலையின் நுனி, சாப்பிட அமர்ந்திருப்பவருக்கு இடது கை பக்கமாக வருவது போல போட வேண்டும். காரணம், சாப்பிடும்போது, வலது கையால் பிசைந்து சாப்பிட வேண்டி இருப்பதால், இலையின் வலது பக்கம் அதிக இடம் தேவை.

அதேபோல, உப்பு, ஊறுகாய், இனிப்பு போன்றவற்றை, இலையின் குறுகலான இடது பக்கத்தில் வைப்பதற்கும், முக்கியமான காரணம் இருக்கிறது. அதாவது, உப்பு, ஊறுகாய், இனிப்பு போன்றவற்றை, அதிகமாக சாப்பிடுவது உடல் நலத்திற்கு கேடு. அவற்றை, அளவாகத்தான் எடுத்துக்கொள்ள வேண்டும். அதனால் தான், இலையின் குறுகலான பாகத்தில், அவற்றிற்கு இட ஒதுக்கீடு செய்யப்படுகிறது.

சாதம், காய் கறிகள், இவற்றை யெல்லாம் போதுமான அளவிற்கு சாப்பிடலாம். அதனால் தான் அவை, இலையின் அகலமான வலது பக்கத்தில் பரிமாறப்படுகிறது.

இலையில், முதலில் வைக்கப்படுவது, இனிப்பு. இதைப் பலரும், கடைசியாகத் தான் சாப்பிடுகிறார்கள். இது தவறு. முதலில் இனிப்பு பரிமாறப்படுவதற்கு காரணமே, இனிப்பை எடுத்து வாயில் வைத்த அடுத்த நொடியில், அந்த இனிப்பு, உடனடியாக உமிழ் நீருடன் கரைந்து, ரத்தத்தில் கலந்து மூளைக்குச் சென்று, வயிற்றில் ஜீரண சக்திக்கு தேவையான அமிலங்களை சுரக்கச் செய்ய உத்தரவிடுகிறது என்பதற்காகத் தான். ஜீரணம் எளிதாக நடைபெற இனிப்பு உதவுகிறது என்பதை உணர்ந்து, அதை முதலில் சாப்பிட்ட பிறகே, மற்றவற்றை சாப்பிடத் தொடங்க வேண்டும்.

இலையைப் போடுவதிலிருந்து, அதில் எப்படி பரிமாறுவது, எதை முதலில் சாப்பிடுவது என்பது வரை, எல்லாவற்றையும் முறையாக வகுத்துத் தந்திருக்கும் நம் முன்னோரை பின்பற்றாமல், அவர்கள் கூறிய நல்லவற்றை மறந்துவிட்டும், மறுத்துவிட்டும், பாஸ்ட் புட் கலாச்சாரத்திற்கு மாறி, உடல் ஆரோக்கியத்தை கெடுத்துக் கொள்பவர்கள், சற்றேனும் சிந்திக்க வேண்டும்.

# 2024 ஜூலை மாத ராசி பலன்கள்


## மேஷம்

ஜூலை மாதத்தில் மேஷ ராசியை சேர்ந்தவர்களுக்கு மதிப்பு, மரியாதை அதிகரிக்கும். உங்களின் நண்பர்களின் வட்டாரம் அதிகரிக்கும். உங்களுக்கு பல வழிகளில் இருந்து பண வருவாய் கிடைக்கும் என்பதால், உங்களின் நிதிநிலை உயரும். குடும்பத்தில் சுப நிகழ்ச்சிகள் நடக்க வாய்ப்பு உள்ளது. இருப்பினும் தேவையற்ற செலவுகளை கவனமாக தவிர்ப்பது அவசியம். இந்த மாதத்தில் உங்களின் ஆரோக்கியத்தில் கூடுதல் கவனம் தேவை. இல்லையெனில் உங்கள் வேலையை முடிப்பதில் சிரமங்கள் ஏற்படும்.



## ரிஷபம்

ரி'ப ராசிக்காரர்களே! ஜூலை மாதமானது தொழில் ரீதியாக நன்றாக இருக்காது. நீங்கள் எடுக்கும் முயற்சிகளில் வெற்றி கிடைப்பது என்பது தாமதமாகும். இருப்பினும் முயற்சிகளை கைவிடக்கூடாது. இம்மாதத்தில் எதிர்மறை எண்ணங்களை மனதில் நுழைய விடாதீர்கள். இம்மாதத்தில் தொழிலில் எடுக்கும் முயற்சிகளுக்கு எதிர்காலத்தில் நல்ல வெற்றி கிடைக்கும். மாதத்தின் இரண்டாம் பாதியில் சில நல்ல செய்திகளைப் பெற வாய்ப்புள்ளது.



## மிதுனம்

ஜூலை மாதத்தில் மிகவும் சிறப்பான பலன்கள் கிடைக்கும். உங்கள் மனதில் உள்ள குழப்பங்கள் தீரும். உங்களின் சிறப்பான தைரியத்தாலும், கடின உழைப்பாலும் கடினமான வேலைகளை அசாத்தியமாக முடிப்பீர்கள். தொழில், வியாபாரம் தொடர்பாக மும்முரமாக செயல்படுவீர்கள். உங்களுக்கு அலைச்சல்கள் அதிகரிக்கும் இருப்பினும் அதன் மூலம் சிறப்பான லாபம் பெறுவீர்கள். இந்த மாதத்தில் உங்களின் கோபத்தை கட்டுப்படுத்தவும். உங்கள் வீட்டில் மங்கல நிகழ்வுகள், பூஜைகள் செய்ய ஏற்பாடு செய்வீர்கள்.



## கடகம்

கடக ராசிக்காரர்களே! ஜூலை மாதம் தொழில் ர ° -தியாக நன்றாக இருக்காது. எதிர்மறை எண்ணங்கள் இம்மாதத்தில் அதிகரிக்க வாய்ப்புள்ளது. இருப்பினும் அப்படிப்பட்ட எண்ணங்களை மனதில் வளர விடாதீர்கள். முயற்சிகளை கைவிடாமல் தொடர்ந்தால், நல்ல வெற்றியை வரும் காலத்தில் பெறலாம்.



## சிம்மம்

ஜூலை மாதத்தில் மகிழ்ச்சி நிறைந்ததாக அமையும். இந்த மாதத்தில் நீங்கள் செய்யக்கூடிய எந்த ஒரு வேலையை முடிப்பதிலும் மிகவும் ஆர்வம் காட்டுவீர்கள். பணியிடத்தில் மேலதிகாரிகளின் ஆதரவு கிடைக்கும். தொழில் செய்யக்கூடியவர்களுக்கு அதை முன்னேற்ற புதிய வாய்ப்புகளும், விரிவு படுத்துவதற்கான வசதிகளும் உண்டாகும். நண்பர்கள், புதிய நபர்களிடம் கவனம் தேவை. யாரையும் கண்மூடித்தனமாக நம்ப வேண்டாம்.



## கன்னி

கன்னி ராசிக்காரர்களே! ஜூலை மாதம் தொழில் ரீதியாக சிறப்பாக இருக்கும். அரசு தேர்வுக்கு தயாராகிக் கொண்டிருந்தால், நல்ல வெற்றியைப் பெறுவீர்கள். இம்மாதத்தில் ஒரு சிறப்பு வழிகாட்டி ஒருவரின் நட்பால் தொழிலில் நல்ல முன்னேற்றத்தைக் காண்பீர்கள்.



## துலாம்

ஜூலை மாதத்தில் ஏற்படக்கூடிய ராஜயோகங்களால் அபரிவிதமான முன்னேற்றங்கள் உண்டாகும். உங்களுக்கு வீடு, வாகனம் வாங்குவது போன்ற சுற்று தொடர்பான முயற்சிகளில் நல்ல முன்னேற்றம் உண்டாகும். உங்கள் வீட்டில் சுப நிகழ்ச்சிகள் நடப்பதற்கான சாத்தியமான சூழல் உண்டாகும். திருமணம் முயற்சியில் உள்ளவர்களுக்கு நல்ல வரம் அமையும். உங்கள் வாழ்க்கையில் வாய்ப்புகளும், வசதிகளும் அதிகரிக்கும். குடும்பத்துடன் மகிழ்ச்சியாக சுற்றுலா செல்ல வாய்ப்புள்ளது.



## விருச்சிகம்

விருச்சிக ராசிக்காரர்களே! ஜூலை மாதம் தொழிலைப் பொறுத்தவரை சற்று கவலை அளிப்பதாக இருக்கும். உங்களின் திறமைக்கேற்றவாறு பணியிடத்தில் உங்களால் எந்த ஒரு முடிவையும் எடுக்க முடியாது. இதனால் மிகுந்த மன உளைச்சலுக்கு ஆளாவீர்கள். மனச்சோர்வில் இருந்து உங்களைப் பாதுகாத்துக் கொள்ளுங்கள்.



## தனுசு

தனுசு ராசிக்காரர்களே! ஜூலை மாதம் தொழிலில் எடுக்கும் முயற்சிகளில் சாதகமான பலன் கிடைக்கும். பணியிடத்தில் உயர்அதிகாரிகளுடன் நல்லுறவு உருவாகும். பணியிடத்தில் உங்களின் சிறப்பான செயல்திறன் காரணமாக பதவி உயர்வு கிடைக்கும் வாய்ப்புள்ளது. வேலையைப் பொறுத்தவரை இனிமையாக இருக்கும்.



## மகரம்

ஜூலை மாதத்தில் உருவாகும் ராஜா யோகங்களால் மகர ராசி சேர்ந்தவர்களுக்கு சிறப்பான பலன்கள் கிடைக்கும். பணியிடத்தில் உங்களுக்கு புதிய பொறுப்புகள், பதவி உயர்வு கிடைக்க வாய்ப்புள்ளது. புதிய வி'யங்களை கற்றுக் கொள்ளவும், செல்வம் சேரவும் வாய்ப்பு உள்ளது. உங்களின் சுகபோகங்கள் அதிகரிக்கும். வியாபாரம் தொடர்பான வி'யத்தில் லாபம் உண்டாகும். இந்த மாதத்தில் சிறிய முயற்சி செய்தாலும் பெரிய லாபம் கிடைக்கும் என்பதால் சற்று கடினமாக முயற்சி செய்வது பெரிய அளவில் நற்பலனை பெற்று தரும். எதிர்பாராத லாபங்கள் கிடைக்கும். சில நேரங்களில் தேவையற்ற பயணங்கள் மேற்கொள்ள நேரிடும்.



## கும்பம்

ஜூலை மாதத்தில் தொழில் முயற்சிகளில் நல்ல வெற்றி கிடைக்கும். வேலை தேடிக் கொண்டிருந்து, வேலையை பெற்றிருந்தால் சிறப்பான செயல்திறனால் நல்ல வெற்றியைப் பெறுவீர்கள். குடும்பத்தினர் மற்றும் நண்பர்களின் ஆதரவால் வேலையை சிறப்பாக செய்து முடிப்பீர்கள்.



## மீனம்

ஜூலை மாதத்தில் தொழிலில் பல பிரச்சனைகளை சந்திக்க நேரிடும். தொழில் ரீதியாக ஏற்றத்தாழ்வுகள் நிறைந்ததாக இருக்கும். இம்மாதத்தில் அவசரமாக எடுக்கும் எந்த தவறான முடிவும், உங்கள் கடின உழைப்பை அழித்துவிடும். எனவே எதிர்மறை எண்ணங்களில் இருந்து விடுபட்டு, தொழிலில் நேர்மறை எண்ணங்களுடன் முயற்சிகளை மேற்கொள்ளுங்கள்.



நீங்கள் கொடுக்கும் ஆலோசனைகளால் மற்றவர்கள் பயன்பெறுவார்கள். குலதெய்வ கோவிலுக்கு சென்று வருவது நல்லது. மூன்றாம் வீட்டில் இருக்கும் குரு பகவான் சற்று மன குழப்பத்தை கொடுத்தாலும் இரண்டாம் வீட்டில் ஆட்சி பெறும் செவ்வாய் தீர்க்கமான சில முடிவுகளை எடுக்க வைப்பார். வாழ்க்கையின் அடுத்த கட்ட நகர்வுக்காய் காத்திருப்பவர்களுக்கு சிறந்த மாதம்.

பார்க்க ரசிக்க

சினிமா படங்கள் குறும்படங்கள் ஆல்பம் பாடல்கள் சினிமா பாடல்கள்

சினிமா ஆடியோ விழாக்கள்

பிரபலங்களின் பேட்டிகள் மற்றும் பல நிகழ்ச்சிகள் காண

அச்சாரம் tv @ SKRN MEDIA (you tube channel)








SKRN MEDIA

SUBSCRIBE LIKE SHARE

## புது மாதிரியான ஹாரர் படம் "பார்க்"!



இன்றைய திரையுலகச் சூழலில் ஹாரர் படங்களுக்கு ஒரு குறைந்தபட்ச வணிக உத்திரவாதம் உண்டு. அந்த வகை நம்பிக்கையில் "பார்க்" என்கிற திரைப்படம் உருவாகி இருக்கிறது.

இப்படத்தை நு.மு.முருகன் இயக்கியுள்ளார் .இவர் இயக்குநர் ஏ. வெங்கடேஷிடம் உதவி இயக்குநராக இருந்து சினிமா கற்றவர்.அக்ஷயா மூவி மேக்கர்ஸ் சார்பாக லயன் நு.நடராஜ் பார்க் படத்தைத் தயாரித்துள்ளார்.இவர் தயாரிக்கும் முதல் படம் இது .சினிமா மீதான காதல்தான் அவரை ஒரு தயாரிப்பாளராக்கியுள்ளது.

இப்படத்தில் கதாநாயகனாகச் சமீபத்தில் வெளியாகி வெற்றி பெற்ற "ஒரு நொடி" படத்தின் கதாநாயகன் தமன் குமார் நடித்துள்ளார். கதாநாயகியாக ஸ்வேதா டோரதி நடித்துள்ளார். பிரதான வில்லனாக யோகிராம் நடித்துள்ளார். கதாநாயகியின் தந்தையாகத் தயாரிப்பாளர் லயன் ஈ.நடராஜ் நடித்துள்ளார்.இவர்களைத் தவிர காமெடியில் கலக்கி கொண்டிருக்கும் பிளாக் பாண்டி, ரஞ்சனா நாச்சியார், கராத்தே ராஜா மற்றும் பலர் நடித்துள்ளனர்.

திருவண்ணாமலையில் ஒரு பார்க் அதாவது ஒரு பூங்காவில் நடைபெறும் கதையாக இது உருவாக்கப்பட்டுள்ளது. இதற்கான படப்பிடிப்பு திருவண்ணாமலை மற்றும் அதன் சுற்றுப்புற ஊர்களில் நடந்துள்ளது.

படம் பற்றி இயக்குநர் ஈ.கே. முருகன் பேசும்போது, "இது ஒரு சஸ்பென்ஸ் ஹாரர் காமெடி கலந்த திரில்லர் என்ற வகையில் உருவாகியுள்ளது.

இந்தப் படத்தின் கதையைத் தயாரிப்பாளரிடம் கூறிய போது நான் சொன்னேன். படத்தின் முதல் பாதி வயிறு வலிக்கச் சிரிக்க வைக்கும்ளூ இரண்டாவது பாதி இதயம் வலிக்கப் பயமுறுத்தும் என்றேன்.அதன்படி கதையையும் சொன்னேன் அவருக்குப் பிடித்திருந்தது. அவருக்கு சினிமா மீது காதல் உண்டு. எனவே இந்தப் படத்தைத் தயாரிக்க முன் வந்தார். சரியாகத் திட்டமிட்டு 36 நாட்களில் படப்பிடிப்பை நடத்தி முடித்து, படத்தை நிறைவு செய்திருக்கிறோம்.

எத்தனையோ பேய்ப் படங்களைப் பார்த்திருக் கிறோம். அதில் பேயை ஓட்டுவதற்கு ஏதாவது ஒரு மதத்தைச் சார்ந்த சாமியார்கள் வருவது போல் தான் காட்டுவார்கள். ஆனால் இந்தப் படத்தில்தான் எந்த மதத்தைச் சார்ந்தவரும் பேய் ஓட்ட வரவில்லை .வேறொரு முறையில் அந்தப் பேயை ஓட்டுவதாகக் காட்சிகள் இடம் பெற்றுள்ளன. இது வேறு எந்தப் படத்திலும் யாரும் சிந்திக்காதது என்று நான் சொல்வேன்.

அண்மையில் வெற்றி பெற்ற ஒரு நொடி படத்தில் நடித்துள்ள தமன்குமார் இதில் நாயகனாக நடித்திருக்கிறார். மிகச் சிறப்பாக நடித்திருக்கிறார் .அதேபோல் சமீபத்தில் வெளிவந்த லாந்தர் படத்தில் நாயகியாக நடித்த ஸ்வேதா டோரத்தி நாயகியாக நடித்துள்ளார்.அதேபோல் அண்மை வெற்றிப் படமான கருடன் படத்தில் வில்லனாக நடித்த யோகிராம் இந்தப் படத்தில் வில்லனாக நடித்துள்ளார். இப்படத்தில் பாடகி சுசித்ரா பாடிய பாடலுக்கு ராபர்ட் மாஸ்டர் நடனம் அமைத்துள்ளார்.இப்படி அண்மைக் காலங்களில் பல வெற்றிப் படங்களில் இடம் பெற்றவர்கள் ,ரசிகர்கள் மத்தியில் முகமறிந்தவர்களா-கப் பரிச்சயப்பட்டவர்களை நடிக்க வைத்திருக்கிறோம்.

ஹாரர் படங்களுக்கு என்றும் வரவேற்பு இருக்கும். முதலீடு செய்யும் தயாரிப்பாளரையும் காப்பாற்றி விடும். எனவே இந்த வகைப் படத்தை எடுக்கத் தீர்மானித்து முடித்தோம்.

இப்படம் நிச்சயம் ரசிகர்களுக்குப் பிடிக்கும் என்ற நம்பிக்கையோடு இருக்கிறோம். ஆகஸ்டில் இப்படத்தை வெளியிடுவதாகத் திட்டமிட்டு இருக்கிறோம்" என்றார்.

சிறுகதை

# தலைமுறை எதிரி!

ஈரோடு கார்த்திக்

அப்துல் ரகீம் கஹுன்கான், தன் புரவியை லாயத்தில் விட்டு விட்டு, வசந்த மாளிகைக்குள் நுழைந்து, தனித்திருந்த அக்பரைப் பார்த்து வணங்கினான்.

தன்னுடைய ஹுக்காவில் மெய் மறந்திருந்த அக்பர், தன் சுய நினைவுக்குத் திரும்பியவனாக, அப்துல்லை உட்காரும்படி சைகை செய்தான்.

அப்துல், தனக்கெதிரே அமர்ந்திருந்த அக்பரை, ஒரு முறை உற்றுப் பார்த்தான்.

அம்மை வடுக்கள் நிரம்பிய அதே நேரத்தில், கவர்ச்சி நிறைந்த அந்த முகத்தை, நீண்ட காலமாகப் பார்த்து வருகிறான்.

இப்போது அந்த முகத்தில், சற்றே சோகமும் வருத்தமும் இழையோடிக் கொண்டிருப்பதை, அவன் முதன் முறையாகக் காண்கிறான்.

சொல்லுங்கள் சுல்தான்... என்னை அழைத்த காரணத்தை?" - அப்துல்லின் குரல், மாளிகைச் சுவர்களில் பதவிசாக எதிரொளிக்கிறது.

ஒரு படையெடுப்பை நிகழ்த்தப் போகிறேன் அப்துல்... அதற்கு, நீ தலைமை தாங்க வேண்டும்..." - பலமுறை ஒத்திகைப் பார்த்திருந்த அக்பரின் குரல், சன்னமாக ஒலிக்கிறது.

கட்டளையிடுங்கள்... வெற்றிக் கனியைப் பறித்து வந்து, காலடியில் சமர்ப்பிக்கிறேன்..."

அக்பரின் முகத்தில், ஒரு ஏளனப் புன்னகை ஓடியது.

ராஜபுதனத்தின் மேவார் ராஜ்ஜியம், நீ வெல்ல வேண்டியது... கொல்ல வேண்டியது, ராணா பிரதாப் சிங்கை..." - கம்பீரமாக ஒலித்த அக்பரின் குரலால், அப்துல்லின் முகத்தில், பீதி தாண்டவமாடியது.



ராஜபுதனத்தின் சிங்கத்தை வெல்லச் சொல்கிறீர்கள்?"

என் படைபலம் உமக்கு உண்டு..."

ராணாவைத் தேடிப் பிடிப்பது, வைக்கோலில் விழுந்த ஊசியைத் தேடுவது போன்றது... ராணாவைக் குறி வைக்கக் காரணம்?"

இந்துஸ்தானம், என் காலடியில் விழுந்து கிடக்கிறது அப்துல்... ராஜபுதனமும் கூட... ஆனால், உதய்ப்பூர் என்னும் மேவார், விழ மறுக்கிறது, என்னைத் தொழவும் மறுக்கிறது... காரணம், ராணா, அவனது வீரம்... என்னை அவமானம் செய்து மகிழ்கிறான் அவன்... அவனது ஆணவத்தைப் போக்கியாக வேண்டும், மொகல் ராஜ்ஜியத்தின் கரும்புள்ளியை கலைந்தாக வேண்டும்..."

என்ன சொல்லி அவமானப்படுத்துகிறான் ராணா?"

என்னை எதிர்க்கும் அரசர்களின் தங்கைகளையும், மகள்களையும் மணந்து, அவர்களை அடக்குகிறேனாம்... பெண்களின் பாவாடையால் விஸ்தரிக்கப்பட்டது மொகல் சாம்ராஜ்ஜியம் என்று அவமதிக்கிறான் ராணா..."

அது மட்டுமா? தங்களுக்குப் பெண் கொடுத்த ராஜபுத்திர அரசர்களை, மதம் மாறியவர்களை, ராணா சற்றும் மதிப்பதில்லை...

சபை நடுவே கிண்டல் செய்து அவமானப் படுத்துகிறான்... கூட்டிக் கொடுத்தவர்கள் என்று கேவலப்படுத்துகிறான்... அவர்களை ராஜ புத்திர இனத்திலிருந்தே ஒதுக்கியும் வைக்கிறான்...”

எனக்கு இணங்காமல், ராணா இறுமாப்புடன் இருக்க, என்ன காரணம்?”

சித்தூரை நாம் கைப்பற்றிய போது நடந்ஂவற்றை, ராணா இன்னமும் மறக்கவில்லை... அவன் நெஞ்சில், அணையாத நெருப்பாய், அந்தத் துயரம் எரிந்து கொண்டே இருக்கிறது...”

சித்தூரை நாம் வெற்றி கொண்ட போது, என்ன நடந்தது?”

வென்ற நீங்கள் மறந்து விட்டீர்கள்... பாதிக்கப்பட்ட அவன், அதை மறக்கவேயில்லை... நம் கையில் அகப்படாதிருக்கும் பொருட்டு, 25,000 பெண்கள், “ஜஹர்“ என்னும் தீக்குளிப்பில் இறந்ததை, ராணா இன்னமும் மறக்கவில்லை... தோற்றோடி, ஆரவல்லி மலைக் குன்றுகளில் ஒளிந்து வாழ்ந்ததை மறக்கவில்லை... உதய்பூர் என்னும் மேவாரை உருவாக்கி அரசாண்டதை மறக்கவில்லை...”

□பயத்தில் அவர்கள் இறந்ததற்கு, நாம் என்ன செய்ய முடியும்?”

□பயத்தை உருவாக்கியது நாம் தானே?”

”இருக்கலாம்... ஆனால், அவனுடைய உடன் பிறந்த சகோதரர்கள், ஜக்பல், சக்தி சிங், சரவ் சிங், அனைவரும் நம்முடன் இருக்கிறார்கள்... சொந்த ரத்தங்களை எதிர்த்து, ராணா யுத்தம் செய்கிறான்... எப்படி அந்த துணிச்சல்?”

□மகாபாரதத்திலிருந்த கிருஷ்‘ணா உபதேசம் தரும் தைரியமது... ஜக்பல், மேவாரின் அரசனாக வேண்டியவன்... மக்களும், அரசப் பிரதானிகளும், அதை விரும்பாததால், ராணா மன்னனாக்கப்பட்டான்... வெறுப்படைந்த ஜக்பல், உங்களோடு சேர்ந்து கொண்டான்... தன் உற்றார் உறவினர்களைப் பகைத்துக் கொண்டு, சொந்த சகோதரர்களின் துரோகத்தைச் சகித்துக் கொண்டு, காட்டிலும் மேட்டிலும் ஒளிந்து கொண்டு, ஒற்றை ஆளாக, ரஜபுதன வீரத்தை மெய்பித்துக் கொண்டிருக்கிறான் ராணா...”

அந்த இனத்தின் பெருமைக்கு, அவன் ஒருவன் போதும்...”

வீரன் வீழ்ந்தாலும், அவன் இனத்திற்கு பெருமை சேர்த்து விட்டே வீழ்கிறான்... துரோகி நெடுநாள் வாழ்ந்தாலும், இனத்தின் பெயரை சேதப்படுத்தி விடுகிறான்...”

உண்மை தான்... ராணாவின் நிலைக்கு, நான் பரிதாபப்படுகிறேன்... ஆனாலும், அவன் என் எதிரி... ஆகவே, படையெடுப்பு துவங்கட்டும்... ராணாவை உயிரோடு பிடிக்க முயற்சி செய்...”

விசித்திரமான விசயம் என்னவென்றால், உங்களின் தாத்தா பாபரை, ராணாவின் தாத்தா ராணா சங்கா எதிர்த்தார்... இப்போது, அவர்களின் பேரர்கள், களத்தில் எதிரெதிராக நிற்கிறீர்கள்...”

தலைமுறை எதிரி...” என்றான் அக்பர்.

மறுநாள், அப்துல் ரகுமான் தலைமையிலான படை, ரஜபுதனத்தை நோக்கிப் பயணமானது.

தன் படைகளுடன் நிலைகொண்ட அப்துல், ராணாவைப் பிடிப்பதற்கான வியூகங்களை வகுக்க ஆரம்பித்தான்.

அதே நேரம், படையைப் பின்பற்றி வந்து கொண்டிருந்த அப்துல்லின் மனைவியும் மகளும், வழி தவறியிருந்தனர்.

பல்லக்கு தூக்கிகளில் ஒருவன், ”பேகம்... நாம் வழி தவறி விட்டோம்... சரியான வழியைக் கண்டறிய முடியவில்லை...” என்றான்.

□அந்தி கவிழ்கிறது... இனி என்ன செய்வது?” - ஆயிசா குழம்பிக் கொண்டிருந்த போது, அந்தக் குதிரை வீரர்கள், பல்லக்குத் தூக்கிகளைச் சூழ்ந்தார்கள்.

பல்லக்குத் தூக்கிகளில் ஒருவன்,

”பேகம்... பயம் வேண்டாம்... வழிப்பறி கொள்ளையர்களாக இருக்கக் கூடும்... தளபதியின் பெயரைக் கேட்டதும், விலகி விடுவார்கள்...” என்றதுடன், அதைச் சொல்லவும் செய்தான்.

முண்ணனியில் இருந்த குதிரை வீரன், உரக்க சிரித்ததுடன், ”நல்லது... நான் அமர்சிங்... ராணா பிரதாப் சிங்கின் மூத்த மகன்...” என்றான்.

பேகத்தின் முகம், சவமாக வெளுத்தது.

சேதியறிந்த அப்துல், எரிமலையானான்.

சற்று நேரத்தில், குதிரையில் வந்து இறங்கினான், ராணா பிரதாப் சிங்.

வலிய வந்து மாட்டியிருக்கிறார்கள் எதிரியின் சொந்தங்கள்...” என்று, அமர்சிங், ஆயிசாவையும் சாயீராவையும் சுட்டிக் காட்டினான்.

அருகே வந்து நின்ற ராணா, ”பயம் வேண்டாம் பெண்களே... என் பகை, அப்துல்லோடு மட்டுமே... நீங்கள், என் விருந்தாளிகளே... இன்று இரவு, பில் பழங்குடியினரோடு நீங்கள் தங்கலாம்... நாளைக் காலை, உங்களின் படை முகாமுக்கு, நானே அனுப்பி வைப்பேன்...”

சாயீரா, அமர்சிங் பல்லக்கை மடக்கிய உடனேயே, சேலை தலைப்பைக் கிழித்து, ஆபரணங்களைக் கோர்த்து, அவசரமாக இரண்டு ராக்கிகளைத் தயாரித்திருந்தாள்.

உங்களை சகோதரர்களாக ஏற்க விரும்புகிறோம்... கையை நீட்டுங்கள்...”

அச்சம் வேண்டாம் பெண்ணே... மனைவியைத் தவிர, மற்ற பெண்களைச் சகோதரிகளாக எண்ணுவது தான், இந்துஸ்தானத்தின் பண்பாடு... அதற்கு நாங்கள் விதி விலக்கல்ல... உன் மனச்சாந்திக்காக, அதைக் கட்டி கொள்ளச் சம்மதிக்கிறேன்... இந்த நேரத்தில், இதே ராக்கியை வைத்து, அக்பர் செய்த அயோக்கியத்தனத்தைச் சொல்ல வேண்டியது என் கடமை...”

சொல்லுங்கள்...”

”இதே ராக்கியை, அக்பரின் கரத்தில் கட்டினாள், ராணி துர்க்காதேவி... சகோதரியாக எண்ணாமல், அவளைக் கொன்றான், அக்பர்... பெண்களைக் கொல்லக்கூடாது என்ற மத விதிகளை அவன் மதிக்கவில்லை... ஆனால், எங்களின் போர் விதிகள், பெண்களைச் சீரழிக்க சொல்லவில்லை...”

அக்பரைப் போல், நீங்களும் வாக்கு தவறிவிடுவீர்களா?”

நான், ராணா பிரதாப்சிங் பெண்களே... அக்பரைப் போல் ஈனப் பிறவியல்ல நான்... இந்துஸ்தானத்தின் பெருமைக்கு, ஒரு தீங்கும் என்னால் நேராது... பெண்களால் ஒரு வெற்றி கிட்டுமெனில், தோற்பதையே பெருமையாகக் கருதுவேன்...”

அதே வேளையில், தீக்கனவுகளைக் கண்டு, தூக்கமிழந்து கொண்டிருந்தான், அப்துல்.

விடியற்காலை வேளையில், முகாமிற்கு வெளியே சத்தத்தைக் கேட்டு எழுந்து வந்தவன், அதிர்ந்தான்.

வெளியே கம்பீரமாக நின்று கொண்டிருந்தான், ராணா. அவனுடன் அமர்சிங்கும், பில் பழங்குடியினரும், பேகமும் நின்றிருந்தனர்.

இதோ... உனக்குச் சொந்தமானவைகள்... எந்தச் சேதமும் இன்றி, திரும்ப ஒப்படைக்கிறேன்... பெற்றுக் கொள், அப்துல்...”

பேகமும் மகளும் முன்னேறி முகாமுக்குள் வர, தாக்க முனைந்த வீரர்களை, அப்துல்லின் சைகை நிறுத்தியது.

போய் வருகிறேன் அப்துல்... களத்தில் சந்திப்போம்...”-ராணா, தன் குதிரையில் தாவி ஏறினான்.

ராணா... ஒரு கேள்வி?”

கேள்...”

உன் இடையில், இரண்டு வாள்கள் தொங்குகின்றனவே... எதற்காக?”

நான், நிராயுதபாணிகளைக் கொல்வதில்லை... அப்படி சந்தர்ப்பம் வாய்த்து விட்டால், இந்த வாளில் ஒன்றைப் பரிசளிப்பேன்... போராடி வெல்வதே, எனக்குப் பிடிக்கும்...”

உன் வீரத்திற்கும், பெருந்தன்மைக்கும், தலை வணங்குகிறேன் ராணா...”

ஜெய் பவானி...” என்ற முழக்கத்தோடு, ராணாவின் குழு அங்கிருந்து கிளம்பியது.

அசல் ராஜபுதன ரத்தத்தைப் பார்த்து விட்டேன்...” என்ற அப்துல், பேகத்தையும் மகளையும் தழுவிக் கொண்டான்.

அக்பரை இறுதி மூச்சுவரை எதிர்த்த பிரதாப், தன் 56 வது வயதில் மரணமடைந்தான். அவனுடைய மகன் அமர் சிங், மொகலாயப் படைகளை, 13 முறை வென்று துரத்தியடித்தான்.

பிரதாப்பை எதிர்த்துப் போரிட முடியாது என்று பதவி விலகிய அப்துல் ரகீம், அக்பரின் மகன் சலீமின் மெய் காவலனாக நியமிக்கப்பட்டான்.

இழந்த மேவாரைத் திரும்பப் பெறும்வரை, ராணா, வெறும் தரையிலேயே உறங்கி, சப்பாத்தியை மட்டுமே உண்டு, வைராக்கியமாக வாழ்ந்து, மேவாரை அக்பரிடமிருந்து கைப்பற்றினான்.

## செய்திக்கதம்பம்!

-பாப்பனப்பட்டு வ.முருகன்



சமையல் பாத்திரங்களை கழுவவில்லை எனில், அபராதம்!

தெற்கு சீனாவிலுள்ள சிச்சுவான் மாகாண அரசு, மக்களிடம் சுகாதாரம் மற்றும் தூய்மைப் பழக்கத்தை கொண்டு வர, சில கடுமையான முயற்சிகளை எடுத்து வருகிறது.

அதன் ஒரு பகுதியாக, சமையல் பாத்திரங்களை கழுவாதவர்களுக்கு, இந்திய மதிப்பில், 116 ரூபாயை அபராதமாக விதிக்கிறது.

படுக்கையை ஒழுங்காக மடித்து வைக்காதவர்களுக்கும், வீட்டு உபயோகப் பொருட்களை நன்றாக சுத்தம் செய்யாதவர்களுக்கும் கூட, இதே அபராதத் தொகை, அங்கு விதிக்கப்படுகிறது.

அதேபோல், தரையில் சம்மணமிட்டு உட்கார்ந்து சாப்பிட்டால், 233 ரூபாயும், வீட்டிலிருக்கும் சிலந்தி வலைகளை அகற்றி, சுத்தமாக வைத்திருக்கா விட்டால், 58 ரூபாயும், வீட்டு முற்றத்தில் சிறுநீர் அல்லது மலம் கழித்தால், 35 ரூபாயும், அபராதமாக வசூலிக்கப்படுகிறது.

நிலைமையின் தீவிரத் தன்மையைப் பொறுத்து, இந்த அபராதத் தொகை அதிகரிக்கவும் வாய்ப்புள்ளதாம். தொடர்ந்து இந்தத் தவறுகளை செய்தால், அபராதத் தொகை இரட்டிப்பாகும் என்றும், அரசு எச்சரிக்கை விடுத்துள்ளதாம்.

# அச்சாரம்
## ACCHARAM
பல்சுவை மாத இதழ்
Tamil Monthly

வ.எண். ______

## பத்திரிகை சந்தாதாரர் படிவம்

Passport Size Photo

பெயர்______________________ த.பெ.______________________

நிரந்தர முகவரி______________________________________________

______________________________________________

பாலினம்______________ தொழில்______________________

ஆசிரியர் அவர்களுக்கு, நான் மேற்காணும் விலாசத்தில் வசித்து வருகிறேன். தங்களின் அச்சாரம் பத்திரிகைக்கு **(ஆயுள்/ஆண்டு)** // சந்தாதாரராக / நன்கொடையாளராக விரும்புகிறேன். கீழ்காணும் முகவரியில் எனக்கு பத்திரிகையை அனுப்பி வைக்குமாறு அன்புடன் கேட்டுக்கொள்கிறேன்.

| சந்தா கட்டண விபரம் | | | ✔ |
|---|---|---|---|
| **ஆயுள் சந்தா** | – | **ரூ.5,000/–** | ☐ |
| **பத்தாண்டு சந்தா** | – | **ரூ.2,500/–** | ☐ |
| **ஆண்டு சந்தா** | – | **ரூ.250/–** | ☐ |
| **நன்கொடை** | – | **ரூ.** | ☐ |

<u>பத்திரிகை அனுப்ப வேண்டிய முகவரி</u>

திரு/திருமதி______________________________________________

______________________________________________

______________________________________________

______________________________________________

தொலைபேசி எண்______________ கைப்பேசி______________ இ.மெயில்______________

நாள்:

இடம்: சந்தாதாரர் கையொப்பம்

படிவம் மற்றும் சந்தா கட்டணத்தை ஆசிரியர், அச்சாரம், எண்.11/6ஏ, குமரன் காலனி 3வது தெரு, வடபழனி, சென்னை–600026 என்கிற முகவரிக்கு அனுப்பவும். டிடி அல்லது காசோலைகளை அச்சாரம் என்கிற பெயரில் அனுப்புமாறு கேட்டுக்கொள்கிறோம். சந்தாதாரர்களுக்கு பின்னர் பணப்பற்று ரசீது தபாலில் அனுப்பி வைக்கப்படும்.

<u>வங்கி கணக்கு விவரம்:</u>

**ACCHARAM - Current Account**

**Acc.No: 6565766161**
**Indian Bank, Saligramam Branch**
**IFS Code: IDIB000S082**

# உலக சினிமா

- அலன்




மாண்டிகோர் (Manticore)

“நான் சின்ன வயசா இருக்கும் போது, ஒரு புலியா இருக்க விரும்பினேன். ஆமா... நான் ஒரு புலியா மாற நினைச்சன். சின்ன வயசுல, இதுமாதிரியான எண்ணங்களெல்லாம் சகஜந்தானே...!“ - என்று ஜூலியன், தன்னைப் பற்றி அந்த சிறுவனிடத்தில், விளையாட்டாக கூறுகின்றான். சிறுவன், மென்மையான புன்னகை பூக்கின்றான். சற்றுநேரத்திற்கு முன்பு, பூட்டப்பட்ட வீட்டில் தீ விபத்தொன்று ஏற்பட, “யாரவது இருக்கீங்களா...?! என்ன காப்பாத்துங்க....! காப்பாபாத்துங்க ப்ளீஸ்....!!“ என்று பூட்டப்பட்ட அந்த வீட்டில் மாட்டிக் கொண்டிருந்த அந்த சிறுவனின் அலறல் சப்தம் கேட்டு, கதவை உடைத்து அவனை காப்பாற்றியிருக்கின்றான், ஜூலியன். ஜூலியன், ஒரு வீடியோ கேம் டிசைனர். தன்னந்தனியான அறையில், கதவைப் பூட்டிக் கொண்டு, ஏசு கருவியின் உதவியுடன், வீடியோ கேம்களுக்கு உயிர் கொடுப்பது, அவனுடைய வேலை. அப்படியொருநாள், தன் வேலையில் மும்முரமாக ஈடுபட்டிருந்த போது தான், அப்படியானதொரு தீ விபத்து சம்பவம், பக்கத்து வீட்டில் நடந்தேறியிருந்தது. அன்றாடம் வேலைக்குச் செல்லும், Single Mother--ன் துணையோடு இருந்த அந்த பத்து வயது சிறுவன், தக்க சமயத்தில், ஜூலியனால் காப்பாற்றப் பட்டிருக்கின்றான். வீடு திரும்பிய சிறுவனின் தாயார், ஜூலியனுக்கு கோடான கோடி நன்றிகளை தெரிவிக்கின்றார். அடுத்தநாள், மூச்சுத் திணறலின் காரணமாக, பாதி ராத்தியில் படுக்கையிலிருந்து தூக்கம் கலைந்து எழுந்து உட்காரும் ஜூலியன், மருத்துவர் ஒருவரை காணச் செல்கின்றான். “இங்க பாருங்க... நீங்க... நாள் கணக்கா, ஒரே ரூம்ல அடைஞ்சு கிடந்தா, இதுமாதிரியான பிரச்சனைகளெல்லாம் வரும். வாரத்துக்கு ஒரு நாளாவது, வெளிய போயி நாலு மனுசங்கள பாத்து, பழகுங்க...! அப்புறம், இந்த மாத்திரையை எடுத்துக்கங்க... நல்லா தூக்கம் வரும்“ - என்று அறிவுரை வழங்குகின்றார், மருத்துவர். மது விடுதியொன்றிற்கு செல்லும் ஜூலியன், அங்கே இளம் பெண் ஒருத்தியை சந்திக்கின்றான். “வீடியோ கேம்-ன்னா... நீ என்ன அதுல விளையாடுவியா...?!“ என்று அந்த இளம்பெண் கேட்க, “இல்ல. எனக்கு விளையாடவெல்லாம் தெரியாது. நான்... வீடியோ கேம்ல இருக்குற, Monsters, Vampires, Aliens... சில நேரங்கள்ல பேய்களை கூட டிசைன் பண்ணுவன்...“ என்கிறான், ஜூலியன். அந்த இளம்பெண்ணுடனான சிறிது நேர பழக்கம், நாளடைவில் படுக்கையை பகிர்ந்து கொள்ளுமளவிற்கு நீள்கின்றது. ஆனால் ஜூலியனுக்கோ, அந்த படுக்கை சுகத்தில் எந்த திருப்தியும் ஏற்படுவதில்லை. அவனுடைய சிந்தனையெல்லாம், வீடியோ கேமிலேயே மூழ்கியிருக்கின்றது. விர்சுவல் ரியாலிட்டியில் அவன் ஒரு படைப்பாளி. கிட்டதட்ட டிஜிட்டல் உலகின் கடவுள், என்று கூட சொல்லலாம். வீடியோ கேமில், NPC வடிவமைப்பிற்கான வேலை ஜூலியனுக்கு கொடுக்கப்படுகின்றது. இதுநாள்-வரை, மிருகங்களை மட்டுமே வடிவமைத்துக் கொண்டிருந்த ஜூலியன் தற்போது, ஊேள-யை உருவாக்க

தொடங்குகின்றான். (NPC- வீடியோகேம்களில் இருக்கும், கேம்களில் பங்கேற்காத மனிதர்கள்) பக்கத்து வீட்டு சிறுவன், பியானோ வாசிப்பதில் விருப்பமுடையவன். தாயார் வீட்டிலில்லாத சமயத்தில், பியானோ கற்பது, அவனுடைய அன்றாட வேலை. அந்த இசை மீட்டல், ஜூலியனின் கவனத்தை ஈர்க்கின்றது. ஜூலியன், டிஜிட்டல் யுகத்தில்... அச்சிறுவனை அச்சு அசலாக வடிவமைக்கின்றான். அச்சு அசலான அந்த டிஜிட்டல் வடிவம், அவனை கிளர்வுறச் செய்கின்றது. ஒருநாள், யாருமில்லாத சிறுவனின் வீட்டிற்கு செல்கிறான் ஜூலியன். "உங்க அம்மா-தான் என்னை பாத்துக்க சொல்லி அனுப்பினாங்க..." என வீட்டில் நுழையும் அவன், "உன்னோட பியானோவை நான், கேட்டுக்கிட்டே இருக்கலாம்னு தோணுது... உனக்கு குசநைனௌ இருக்காங்களா...?!" என அவன் கேட்க, "ரெண்டு" என்கிறான் சிறுவன். "ஓ... எனக்கு யாருமேயில்ல. நாம... நாம ரெண்டு பேரும் Friends-யா இருக்கலாமா...?! என்னை ஏத்துக்குவியா...?!" என ஜூலியன. கேட்க, "ஹிம்..." என்றான் சிறுவன். "பெஸ்டிகளுக்குள்ள நடக்குறதெல்லாம், யார்கிட்டயும் சொல்ல மாட்டாங்க...! அப்படி பெஸ்டிகளுக்குள்ள, என்ன இருக்குன்னு தெரியுமா...?!" "என்ன...?!"

"நம்பிக்கை. இது உங்க அம்மாவுக்கு கூட தெரிய கூடாது. சரி... நீ சூடா சாக்குலேட் குடிக்க விரும்புறியா..." என ஜூலியன் கேட்க, "இதோ இங்க கப் இருக்க, இங்க கோகோ பவுடர் இருக்கு" என வெகுளியாக அலமாறியை சுட்டிக் காட்டுகின்றான், அந்த சிறுவன். மைக்ரோ ஓவனில் சாக்குலேட்டை தயார் செய்யும் போது, மருத்துவர் பரிந்துரைத்த, அந்த தூக்க மாத்திரையையும் சேர்த்து கலக்கி கொடுக்கிறான், ஜூலியன். "எனக்காக, பியானோ வாசிப்பியா...?!" என்று ஜூலியன் கேட்க, ஆர்வத்துடன் எழுந்து சென்ற சிறுவன், பியானோ மீதே மயங்கிக் விழுகின்றான். ஜூலியனுக்கு மேல்மூச்சு கீழ்மூச்சு வாங்குகின்றது இதயம் படபடக்கிறதுஇ காதுகள் அடைபட்டு விடுகின்றன... அவன் சிறுவனை நெருங்குகின்றான்.

சுவற்றில் ஒட்டப்பட்டிருந்த, சிறுவன் வரைந்த ஓவியத்தை ஒருகணம் நோட்டமிடுகின்றான். அந்த ஓவியத்தில்.. ஜூலியனின் முகமும், ஒரு புலியின் உடலும் இணைக்கப்பட்டிருக்கின்றது. ஜூலியனுக்கு மூச்சு வாங்குகின்றது இதயம் படபடக்கின்றதுஇ அவன் சிறுவனை நெருங்குகின்றான். பண்டைய இதிகாச புராணங்களில் குறிப்பிடப்படப்படும், கொடூர மிருகத்தின் உடலும், மனிதனின் தலையும் கொண்ட, ஆயவெைஉழசந என்ற ஜந்துவின் உருவமும்.... சிறுவனால் வரைந்திருந்த அந்த ஓவியத்தின் உருவமும் ஒத்திருந்திருந்தது. ஜூலியனுக்கு மூச்சு வாங்குகின்றது இதயம் படபடக்கின்றது அவன் சிறுவனை நெருங்குகின்றான். ஜூலியனுக்கு அவன் செய்யப்போகும் காரியத்தை எண்ணி பதற்றமும் பயமும் தொற்றிக் கொண்டாலுமே கூட, அவனது மிருகத்தின் உடல், அவனை கிளர்வுறச் செய்கின்றது. அவன் சிறுவனை நெருங்குகின்றான்.... ஒரு படைப்பாளி (அ) ஒரு இயக்குநருக்கு, பொதுப்படையான உலகப் பார்வை என்பது உண்டு. அதாவது, "உலகம் தற்போது எப்படி இருக்கின்றது...?!இ அது எவ்வாறு, எதிர்காலத்தில் மாற்றம் பெற வேண்டும்...?!" என்கிற பொதுப்படையான உலகப்பார்வை உண்டு. அது ஒவ்வொரு படைப்பாளிக்கும் வித்தியாசப்படும்இ வேறுபடும். எப்படிபார்த்தாலுமே கூட, ஒரு படைப்பாளியின் கண்ணோட்டத்தில் தான், அவனது படைப்பானது... பிரச்சாரம் செய்யப்பட்டிருக்கும்.

"நான் எதையும் சொல்லவும் இல்லை சொல்ல நினைப்பதும் இல்லை" என்று சொல்லும் படைப்பாளிகளுமே கூட, யதார்த்தத்தை பதிவு செய்ய அச்சப்படுவார்கள். ஏனெனில் அதற்கு காரணம், Objective Morality. பொதுப் படையான உலகம் ஏற்றுக் கொண்டிருக்கின்ற அறநெறி கோட்பாடுகளுக்கு உட்பட்டே, அந்த படைப்பை அவர்கள் உலகிற்கு அறிமுகப்படுத்துவார்கள். பொறு-ப்பும் சமூக அக்கறையும் இருப்பதாக கருதி,

எதிர்மறை கதாபாத்திரங்களின் பார்வையிலேயே கதையை நகர்த்துவதினாலும் கூட, மீண்டும் மீண்டும் டம்பளருக்குள்ளே நீச்சலடிப்பது தான், அவர்களின் இயல்பு. ஆனால், குற்றங்களுக்கான தீர்வு, குற்றவாளியின் மனநிலையிலே உள்ளதுளூ அவனுடைய பார்வையிலேயே இருக்கின்றதுளூ அந்த இடத்தில்தான் அறநெறியே கூட உருவாக்கம் பெருகின்றது. சைக்கலாஜிக்கல் டிராமா செய்வது தான், கதாசிரியர்களுக்கே சவாலான சிக்கலான செயல் முறை. வேறெந்த ஜானரிலும், சைக்காலஜியின் துண்டுகளை வைத்துக் கொண்டு... கதையை மிக எளிமையாக நகர்த்திவிட முடியும். ஆனால், அதனை டிராமாவிற்குள் அடக்கும்போது தான், யதார்த்தத்தை நெருக்கமாக அணுக முடியும்....

## கல்வி உதவித் தொகை பெறுவதற்காக மின்னணு முறையில் விண்ணப்பங்கள் வரவேற்கப்படுகின்றன

சென்னை, மத்திய அரசின், தொழிலாளர் மற்றும் வேலைவாய்ப்பு அமைச்சகத்தின் கீழ், பீடி, சுண்ணாம்புக்கல் மற்றும் டோலமைட் சுரங்கத் தொழிலாளர்கள் மற்றும் சினிமா தொழிலாளர்களின், ஒன்றாம் வகுப்பு முதல் தொழில் முறை படிப்புகள் வரை பயிலும் குழந்தைகளுக்கு, 2024-2025-ம் நிதி ஆண்டில், ரூபாய் 1000.ஃ- முதல் ரூபாய் 25000.ஃ- வரை, கல்வி உதவித் தொகை பெறுவதற்காக, மின்னணு முறையில் விண்ணப்பங்கள் வரவேற்கப்படுகின்றன.

1) https://scholarships.gov.in என்கிற, தேசிய கல்வி உதவித்தொகை வலைத்தளத்தில், பூர்த்திசெய்யப்பட்ட விண்ணப்பங்களை மாணவர்கள் ஒரு முறை பதிவு (OTR) மூலம் மட்டுமே சமர்ப்பிக்கலாம்.

2) ஒவ்வொரு மாணவரும், தங்களுக்கென தனியாக, தேசிய மயமாக்கப்பட்ட வங்கியின், மைய வங்கி அமைப்பு என்ற தொழில்நுட்பமுறையில், தங்களுடைய சேமிப்புக் கணக்கானது, தேசிய மின்னணு பரிவர்த்தனை வசதிகளை பெற்றிருக்க வேண்டும்.

3) விண்ணப்பதாரர்கள், தங்களது ஆதார் எண்ணை, தங்களுடைய சேமிப்பு வங்கி கணக்குடன் இணைத்திருந்தால் மட்டுமே, கல்வி உதவித்தொகை பெறுவதற்கு தகுதியுடையவராக கருதப்படுவர்.

4) இத்திட்டத்தின் கீழ், கல்வி நிதி உதவித்தொகை பெறுவதற்கு, விண்ணப்பதாரர்கள், தங்களது ஆதார் எண்ணை பயன்படுத்துவதற்கு, மின்னணு முறையில் ஒப்புதல் வழங்க வேண்டும்.

5) கல்வி நிறுவனங்களின் பங்களிப்பு, மிகவும் முக்கியமானதாகும். பதிவு செய்யப் படாத பள்ளிகள், கல்லூரிகள், https://scholarships.gov.in என்ற, தேசிய கல்வி உதவித்தொகை வலைத்தளத்தில், முதலில் பதிவு செய்தல் வேண்டும். பின்பு, மேற்குறிப்பிட்ட வலைத்தளத்தில், குறிப்பிடப்பட்டுள்ள வழிகாட்டுதல்களின் படி, அனைத்து விண்ணப்பங்களையும் ஆராய்ந்து, ஒப்புதல் வழங்கி, தங்களது கல்வி நிறுவனங்களின் பதிவு செய்யப்பட்ட முகவரியில் இருந்து சமர்ப்பிக்க வேண்டும். ஒருவேளை, கல்வி நிறுவனங்கள், மின்னணு விண்ணப்பங்களை தங்களின் பதிவு செய்யப்பட்ட முகவரியில் இருந்து சரிபார்க்காமல், அடுத்தகட்ட சரிபார்க்கும் முறைக்கு சமர்ப்பிக்கும் பட்சத்தில், அந்த விண்ணப்பங்களை மேற்கொண்டு கல்வி உதவித்தொகை பெறுவதற்கு செயல்படுத்த இயலாது.

வகுப்பு ஒன்று முதல் பத்து வரை விண்ணப்பங்கள் வந்து சேர வேண்டிய கடைசி நாள் 31.08.2024 மற்ற அனைத்து உயர் கல்வி மாணவர்களின் விண்ணப்பங்கள் வந்து சேர வேண்டிய கடைசி நாள் 31.10.2024.

மேற்கொண்டு விளக்கங்கள் மற்றும் உதவி பெறுவதற்கு அணுகவும்:- மத்திய நல ஆணையர் அலுவலகம், தொழிலாளர் நல அமைப்பு, தரைத்தளம், சிட்கோ நிர்வாக கிளை அலுவலக வளாகம், திரு.வி.க.தொழில் பூங்கா கிண்டி, சென்னை – 600032. மின்னஞ்சல் – wclwo.chn-mole@gov.in தொலைபேசி எண்: 044-29530169

# கவிதைக் கூடல்

தனித்தலையும் கேள்விகள்!

அவ்வப்போது அப்படித்தான்
என் வெறுமைப் பொழுதுகளின்
துயர் களைந்து விடுவிக்க
ஒரு சிட்டுக்குருவி
ஒரு பட்டாம்பூச்சி போல
துறுதுறுவென
சிரித்துப் பேசித்திரியும்
எதிர்வீட்டுக் குட்டிப்பாப்பாவின்
வருகை அவசியப்படுகிறது

வரும்போதே வாய் நிறைய
கேள்விகளை அள்ளி வருபவள்
ஒவ்வொன்றாய் என்னிடம்
எடுத்து வைப்பாள்

ஒன்று முடிந்து இன்னொரு கேள்வி
அது கடந்ததும் அடுத்த கேள்வியென
முடிவிலியாய்
கேள்வி பதில் தொடரும் கணம்
அவளுக்கான திடீர் அழைப்பில்
விடைபெற்றுப் போவாள்

போகும் முன் அவள் கேட்ட கேள்வி
அப்பாவியாய் என் பதிலுக்கு
அங்கேயே தனித்து
அலைந்துகொண்டிருக்கும்.

ஆ.மகிழினி, சிதம்பரம்

விருப்பம்!

பூக்காரப் பெண்ணின்
அன்றைய விற்பனையின்
முடிவுறு கணத்தில்
அவள் விரும்புவது ஒன்றே
தலைச்சுமையாய் சுமந்த
பூக்கூடையில்
சரங்கள் தவிர்த்து வாசம் மட்டும்
மிச்சமிருக்க வேண்டுமென்பதே.

வீ.கோகுலன், திருவண்ணாமலை

நேற்றைய குழப்பங்கள்!

மெதுமெதுவாய்
மரங்களிலிருந்து வீழ்கின்றன
பழுத்த இலைகள்

லாவகமாய்
வேலியில் ஊர்ந்தோடுகிறது
ஓணான்

சக பறவைகளின்
கதம்பக் குரல்களிலிருந்து
தனித்துத் தெரியும்படி
எப்போதும் போல கூவுகிறது
குயில்

உதிர்ந்த பூக்களுக்கான
வருத்தம் கிஞ்சித்துமின்றி
புதிய பூக்களோடு
மணந்திருக்கிறது பூச்செடி

நேற்றைய குழப்பங்கள்
ஏதுமின்றி
எல்லாமே அதனதன் போக்கில்
இயல்பாய் இருக்கின்றன
என்னைத்தவிர.

மு.ஆதினி, சேலம்

(தொகுப்பு: -பாப்பனப்பட்டு வ.முருகன்)

Owned, Published and Printed by M.C.SEKAR Published from SF1, 2nd Floor, 5/10, Anna Colony, Virugambakkam, Chennai - 600 092. Printed at J.M.PROCESS at 22/49, Subedar hussain Street, Border thottam, Royapettah, Chennai - 600 014. Editor: M.C.SEKAR


ஜூலை 12 முதல்
CHANDRASUDHA FILMS
ஆர்கே
வெள்ளிமேகம்

ACCHARAM, Tamil monthly, July 2024
Date of publication 1st Every Month
Poster at Pathrika channel Egmore
RNI No.TNTAM/2016/69258 R.Dis.No.610/2016
Postal Reg.No.TN/CC(S)DN/559/23-25
Posted between 1-7 July 2024

